Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-28 | 13-12-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-29

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx
Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

☆ அமைச்சர் அதாவுல்லாவுக்குஆயுதக்குழுக்களுடன் தொடர்பு

☆ டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்குவார்

# கிழக்கில் அண்மைய வன்முறைகளுக்கு ஒட்டுக்குழுக்களே காரணமாகும்

## கருணா இந்தியாவில் இருப்பதாகவும் புலிகளிடம் சரணடைந்தோர் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படும் சம்பவங்களுக்கு சிறிலங்கா படைப்புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்தியங்கும் தேச விரோத ஆயுதக் கும்பலே காரணம் என தேசவிரோத ஆயுதக் கும்பலின் செயற்பாடுகளால் அதிருப்தியுற்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த புகழ்வேந்தன்,தீபன் ஆகிய இரு இளைஞர்களும் கரடியனாறு தேனகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் தெரியப்படுத்தினர். மேலும் கருணா தற்பொழுது இந்தியாவில் உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.



அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- சிறிலங்கா படைப் புலனாய்வுப்பிரிவின் துணையுடன் இயங்கி வரும் ஆயுதக் குழுவின் பிரதான முகாம் தீவுச்சேனை, மற்றும் திருக்கோணமடு ஆகிய இடங்களிலுள்ளன. அவர்களில் இருபது பேர் கொண்ட குழுவினரை அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்பிவைத்தார்கள். இவ்வாறு அனுப்பியதன் நோக்கம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை நடாத்துவதற்கே என்பது தெளிவாகத் தெரிகின்றது எனக் குறிப்பிட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் படையினர்-புளொட் இணைந்து கடும் சோதனை

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பெண் ஒருவர் கடத்தப்பட்டமையை அடுத்து வவுனியா நகர் எங்கும் பெருமளவு விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தேடுதல் நடவடிக்கையில் படையினருடன் இணைந்து புளொட் அமைப்பினரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் முதல் விசேட அதிரடிப்படையினருடன் படையினரும், பொலிசாரும் இணைந்து இரவிரவாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்துக்கல்லூரி பகுதியில் நேற்று இரவு இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரிக்கு முன்பாக நேற்றிரவு முன்னூறிற்கும் அதிகமான இராணுவத்தினரும், பொலிசாரும் குவிக்கப்பட்ட அதேநேரம் அப் பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டமையால் மக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர். சுமார் 7.30 மணியளவில் இந்த இராணுவ பொலிஸ் குவிப்பு நடைபெற்றதை (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. பூவரசங்குளத்தில் கிளைமோர் குண்டுவெடிப்பு

வவுனியா வாரிக்குட்டியூர் பூவரசங்குளப் பகுதியில் நேற்றுக்காலை கிளைமோர் குண்டுத்தாக்குதல் ஒன்று இடம்பெற்றிருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர். பொலிஸ காவலரண் ஒன்றைக் குறிவைத்துத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாகவும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் காப்பரணில் யாரும் இல்லாததன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை பொலிஸ் நிலையத்துள் அடுத்தடுத்து இரு கைக்குண்டுகள் வீச்சு

- அதிகாரி உட்பட 21 பொலிசார் காயம்

(மன்னார்)

மன்னார் பேசாலைக்கடற்கரைக்கு அருகாமையுள்ள சிறிலங்கா பொலிஸ நிலையம், மீது நேற்றிரவு இனந்தெரியாததோரால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்களில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட இருபத்தொரு பொலிசார் காயமடைந்துள்ளதாக மன்னார் பொலிசார் கூறியுள்ளனர்.இதில்ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்..

சம்பவம் நடைபெற்ற நேரம் அப் பகுதிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பொலிசாருக்கு வகுப்பு நடத்திக் கொண்டிருந்தபோது இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடந்ததாகவும், இதன் போது இரண்டு கைக்குண்டுகள் அடுத்தடுத்து வீசப்பட்டதாகவும், மன்னார் பொலிசார் மேலும் கூறியுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறு மூலையில் கிளைமோர் தாக்கு படையினர் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இரண்டு சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

காலை 7.30 மணியளவில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அண்மித்தபகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் குழு முக்கியஸ்தர் வவுனியாவில் கடத்தல்

(செட்டிகுளம்)

புளொட் குழுவின் முக்கியஸ்தரும் மத்திய குழு உறுப்பினருமான பாருக் என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி கணேசலிங்கம் என்பவர் வவுனியாவில் வைத்து இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டிருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர். நேற்று முற்பகல் வவுனியா சிதம்பரபுரத்திற்கும் சமணங்குளத்திற்கும் இடையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் முஸ்லிம் வியாபாரி கொலை மூதூரில் வெட்டுக்காயங்களுடன் சடலம்

திருகோணமலை மாவட்டம் கோபாலபுரத்தில் முஸ்லிம் வர்த்தகரொருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை - புல்மோட்டை வீதி கோபாலபுரம் பத்தாம் கட்டையில் நடந்த இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் வர்த்தகரான எம்.ரபாய்டின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலிப்பகுதியில் மக்கள் மீது சிறிலங்கா படையினர் தாக்கு

-திறந்த பல்கலைக்கழக மாணவன் உட்பட பலர் காயம்


யாழ். பலாலி வீதி திருநெல்வேலிப்பகுதியிலுள்ள ஆலடிச் சந்தியில் நேற்று போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் கடும் தாக்குதல் நடத்தினர். இதில் திறந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உட்பட பலர் படுகாயமடைந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## போருக்கு முகம் கொடுத்தபடியே இளையதலைமுறை முன்னேறிவருகின்றது

– கலைத்துறையில் வெற்றியீட்டிய மாணவருக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் பாராட்டு

தமிழீழதேசம் எவ்வளவு விரைவாக விடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறதோ அதேபோன்று எமது இளம்தலைமுறையினரும் போருக்கு முகம் கொடுத்தபடியே சகல துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள்தெரிவித்துள்ளார்.

நேற்று கலைத்துறையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



(படம்:-சசி)

## வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வன்னிசெல்ல மங்கள சமரவீர அனுமதி மறுப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுப்பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் வன்னிக்குச்செல்வதை சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அனுமதி மறுத்து வருவதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராகத்தொடர்ந்து செயற்பட்டு வரும் நோர்வே பிரதிநிதிகள் மட்டுமே வன்னிக்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் ஏனையோருக்கு விடுதலைப் புலிகளைச்சந்திக்க வேண்டிய தேவை எதுவுமில்லை, அவர்களைச் சந்திக்க அரசாங்கம் எதுவித வசதிகளையும் செய்து கொடுக்க மாட்டாது எனவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார். அண்மையில் கொழும்புக்கு வருகைதந்திருந்த ஜப்பானிய சமாதானத் தூதுவர் யகூசி அகாஷி வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்திக்க விடுத்தவேண்டுகோளை மங்கள சமரவீர நிராகரித்து விட்டதாகவும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளைச் சந்திப்பதை அனுமதிக்கக்கூடாது (12 ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி

**Dreamweaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு:

வின்நெற் கணனி பயிற்சி நிலையம்

டிப்போவீதி, கிளிநொச்சி

(சி.13074)


## தவறிவிட்டது

சிந்துஜா கணேசலிங்கம் என்பவரது அடையாள அட்டை (875072773-V,பயண அனுமதி அட்டை என்பன விசுவமடுவிற்கும், புளியம்பொக்கணைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது தனபாலசிங்கம் புளியம்பொக்கணை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7087)

# வன்னியில் பிரதேச ரீதியாக விவசாய வினாடிவினாப் போட்டி

(அலுவலகசெய்தியாளர்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் வேளாண் செய்கையாளரை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கிடையிலான வினாடிவினாப் போட்டிகள் பிரதேச ரீதியாக



(படம்:-சோதி)

இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களமும், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து ஜினசேன கம்பனியின் ஆதரவுடன் நேற்று கிளிநொச்சி பிரதேச விவசாயிகளுக்கான வினாடிவினாப் போட்டிகள் கிளி.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடத்தின.

கிளி. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஜினசேன கம்பனி சந்தைப்படுத்தல் முகாமையாளர் மஞ்சநாயக்க, வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன பொதுமுகாமையாளர் சி.புவனேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த செல்வராசா தலைமையில் வினாடிவினாப் போட்டி இடம்பெற்றது.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு வன்னி வேளாண்தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் வே.விக்கினேஸ்வரன் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை முல்லை மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்று வரும் விவசாய வினாடிவினாப் போட்டிஅண்மையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், உடையார்கட்டு மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பாடவிதான உத்தியோகத்தர் சிவபாதம் தலைமையில் நடைபெற்றது.

நான்கு குழுக்களாகத் தெரிவு செய்து நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வன்னிவேளாண் தொழில்நுட்ப பணிப்பாளர் விக்கினேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார்.

இதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வினாடிவினாப் போட்டி முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் தலைமையில் நடைபெற்றது.

இங்கும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விக்கினேஸ்வரன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

மேற்படி போட்டி நிகழ்விற்கு அவ்வப்பாடசாலை விவசாயபாட ஆசிரியர்கள், மற்றும் மாவட்ட விவசாய போதனாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (சோ.கு.தீ)


## தொழில் நுட்பக்கல்லூரிகளின்வலய மட்ட உள்ளகப் பரீட்சை-2005

*யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரியின் இடை நிறுத்தப்பட்ட மேற்படி பரீட்சையின் 3ஆம்நாள் பாடங்கள் 21.12.2005 புதன்கிழமை மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகும். 1 ஆம்வருடபரீட்சை டிசம்பர் 21,22 ஆம் திகதிகளிலும் 2 ஆம்வருட பரீட்சை டிசம்பர் 22ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெறும்.*

அதிபர்

தொழில் நுட்பக்கல்லூரி,

யாழ்ப்பாணம்.

(சி.13555)



## பகிரங்க ஏலவிற்பனை

வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் பாவனையிலுள்ள கீழ் குறிப்பிடப்படும் விபரப்படியான இரண்டு மோட்டார் சைக்கிள்களும் எதிர்வரும் 24.12.2005 ஆம்திகதி காலை 9.30 மணிக்கு தலைமைப்பணிமனை மண்டபத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் பங்கு கொள்ளவிரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்பாக ரூ.250/- உம், மீளளிக்கப்படும் வைப்பாக ரூ.1000.:- உம் செலுத்த வேண்டும். தெரிவுசெய்யப்படும் கேள்வியாளர் கேள்வித் தொகையின் அரைப்பங்குக்கு குறையாமல் உடன் செலுத்துவதுடன் மீதியை மூன்று தினங்களுக்குள் செலுத்திப் பொருளை எடுத்துச்செல்ல வேண்டும்.ஏலதாரரின் முடிவே இறுதியானதாகும்.

01.சி.டீ.125 என்.பீ ஜீ.கி.யூ 9476

02.எம்டி 90-த13-0962

காரியாலய நேரத்தில் மோட்டார் சைக்கிள்களை பார்வையிடலாம். மேலதிக விபரங்களுக்கு தலைமைப் பணிமனையில் தொடர்புகொள்ளவும்.

*தலைவர்,*

*வ. வ. ப. நோ. கூ. சங்கம்,*

*நெடுங்கேணி.*

(சி.13495)


# அரவம் தீண்டி சிறுவன் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

உறக்கத்திலிருந்த சிறுவனை நடுநிசியில் அரவம் தீண்டியதன் காரணமாக சிறுவன் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று சோலைநகர் புதுமுறிப்புக் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

தந்தையுடன் சேர்ந்து உறக்கத்தில் இருந்த சிறுவனை அரவம் தீண்டியுள்ளது. சிறுவனின் அலறலைக் கேட்டு எழுந்த தந்தை படுக்கை இடத்திற்கருகாமையாக அரவம் சென்று கொண்டிருப்பதைக் கண்டு உடனடியாக நேற்று அதிகாலை 3.00 மணியளவில் சிறுவன் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சையளிக்கப்பட்ட பொழுதிலும் சிகிச்சை பலன் அளிக்காத நிலையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வைத்தியசாலையில் மரணமானார்.

சோலைநகர் புதுமுறிப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கமலேஸ்வரன் (வயது-13) என்ற சிறுவனே அரவம் தீண்டியதால் மரணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக கிளி.மாவட்டத்தில் பலர் பாம்புக்கடித்தாக்கத்துக்குள்ளான நிலையில் கிளி.மாவட்டவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளமையினை வைத்தியசாலைக் குறிப்பேட்டின் மூலம் தெரிய வந்துள்ளமை குறிப்பிட வேண்டிய தொன்றாகும். (சோ)

## கூட்டம் ஒத்திவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

இன்றுநடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது.

இக்கூட்டம் இம்மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கேட்டுக் கொண்டுள்ளார். (கு.தீ)

# கல்உடைக்கும் ஆலை ஒட்டுசுட்டானில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே நாட்டின் இந்துகலாசார மன்றத்தின் அனுசரணையுடன்முல்லை மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கல் உடைக்கும்ஆலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டின் இந்து கலாசார மன்றத்தினால் பத்து இலட்சம் ரூபா இதற்கு நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

பொருண்மியமதியுரையகத்தினதும் நோர்வே இந்து கலாசார மன்றத்தினதும் கூட்டு முயற்சியினால் இந்த ஆலை செயற்படுத்தப்படவுள்ளது.

தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட திறப்புவிழா நிகழ்வில் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பிரதிநிதிகள், பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (தீ,கு)

## மனிதஉரிமைதினம் வவுனியாவிலும் அனுஷ்டிப்பு

(வவுனியாசெய்தியாளர்)

சர்வதேச மனிதஉரிமைகள் தினம் வவுனியாவில் மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒன்றியத்துடன் வவுனியா அரங்காலயா பண்பாட்டுக் குழு இணைந்து சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கருத்தாடல் அரங்கு ஒன்றை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடாத்தியது. (21,10)

# சிற்றூர்தி-உந்துருளி விபத்து; உந்துருளியில்சென்றவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

பயணிகள் சிற்றூர்தி உந்துருளியுடன் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் கிளிநொச்சி


(படம்:-சோதி)

டிப்போச்சந்தியின் ஏ.9 நெடுஞ்சாலை திருப்புமுனையில் இடம்பெற்றது.

பரந்தன் குமரபுரம் கால் ஏக்கர் பகுதியைச்சேர்ந்த கோ.சந்திரசேகரன் (வயது-52) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு உடன் விரைந்த நகரபோக்குவரத்துகாவல்துறையினர் விபத்துக்குறித்த விசாரணையினைமேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## 11 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

| பிறந்த திகதி | | மறைந்த திகதி |
| --- | --- | --- |
| 27 ▪ 11 ▪ 1949 |  | 17 ▪ 11 ▪ 1994 |

**சிவகுரு நவரத்தினம்**

**(கனகா பத்திரிகை விற்பனையகம்-திருநெல்வேலி (உரிமையாளர்)**

**(திதி.13.12.2005)**

*பதினொரு ஆண்டு கடந்தாலும்*
*பக்கத்தில் இருக்கின்றீர்கள் அப்பா*
*அதிசயமான வாழ்வை நீத்தே*
*ஆண்டவனிடம் சென்றீர்கள் அப்பா*

*கதியென வாழ்ந்தே நீங்கள் பிரிந்ததால்*
*கலங்கிப் புலம்பி நிற்கின்றோம் அப்பா*
*விதி செய்த வேலையென்றே எண்ணி*
*விடையவன் பாதக்கமலங்களைப் பற்றினோம்.*

*தற்போதைய முகவரி:-*
இல:-60,பலாலிவீதி,
திருநெல்வேலி.

நிரந்தரமுகவரி:-
கனகாஇல்லம்,
கைதடிகிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

(சி.13556)



## SAAMSTECH

SAAMSTECH இன்
இலவசப் பாடநெறி
இடம்:-ரிம்மர் மண்டபம்
காலம்:-17.12.2005 (சனிக்கிழமை)
நேரம்:09-11,11-1.00,2.00-4.00,4.00-6.00
ஏதாவது ஒரு வகுப்பில் பங்குபற்றலாம்.
Note:-
15.12.2005 போயாதினம் அன்று வகுப்பு நடைபெறாது.

841 Hospital Rd jaffna
211/4 Kasthuriyar Rd jaffna T.P.4591571,2229505

(7001)

-அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட-

# ஆப்கானிஸ்தான் அதிபருக்கு தலிபான் மரண தண்டனை விதிப்பு!

(காபூல்)

**அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்பட்ட ஆப்கானிஸ்தான் அதிபருக்கு மரணதண்டனை விதித்திருப்பதாக தலிபான் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.**

ஆப்கானிஸ்தான் மீது கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா படையெடுத்து தலிபான் ஆட்சியை அகற்றியது. அங்கு இப்போது அதிபர் அமீது கர்சாய் தலைமையில் ஆட்சி நடைபெற்று வருகின்றது.

பாதுகாப்புப் பணிகளுக்காக அமெரிக்கப் படைகள் இன்னும் ஆப்கானிஸ்தானில் நிறுத்தப் பட்டுள்ளது. புதிய அரசு மீதும் அமெரிக்கப் படைகள் மீதும் தலிபான் தீவிராவதிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்

இந்த நிலையில் தலிபான் தீவிரவாதிகள் அதிபர் அமீது கர்சாய்க்குமான தண்டனை விதித்திருப்பதாக அறிவித்துள்ளனர் அமெரிக்காவுக்கு ஆதரவாக கர்சாய் செயல்பட்டதால் அவருக்கு நாங்கள் மரண தண்டனை விதித்திருக்கிறோம். எங்கள் இயக்கத்தினர் எந்த நேரமும் அவரது மரண தண்டனையை நிறைவேற்றுவார்கள் என்றும் தலிபான் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து அமீது கர்சாய்க்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## சீனாவுக்கும் திபெத்திற்கும் இடையில் புகையிரதப் போக்குவரத்து

(பீஜிங்)

சீனத் தலைநகர் பீஜிங்கில் இருந்து திபெத் தலைநகர் லாசாவுக்கு நேரடி புகையிரதப் போக்குவரத்து அடுத்த ஆண்டு ஜுலை முதலாம் திகதி ஆரம்பமாகிறது. அது தொடங்க ஆரம்பித்ததும் அதுதான் உலகிலேயே உயரமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த புகையிரதப் போக்குவரத்து என்ற பெயரைப் பெறும்.

## திமிங்கலங்கள், டொல்பின்கள் பனிப்புயலுக்குப் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ப்ரீஸ்டர் மாநிலத்தின் கடலில் பனிப்புயல் ஏற்பட்டது. இப் பனிப்புயலில் சிக்கி ஒன்பது திமிங்கிலங்கள் மற்றும் 24 டொல்பின்கள் பலியாகியுள்ளன.

பெரிய மீன்



இந்தோனேஷியாவின் லோக்கா கடற்கரையில் பிடிக்கப்பட்ட பெரிய மீன் ஒன்றை மகிழ்ச்சியுடன் தூக்கி வரும் மீனவர்.

# பேருந்தில் பட்டாசு வெடித்தது: 50 பேர் பலி; 19பேர் காயம்

– பாகிஸ்தான் லாகூர் நகரில் சம்பவம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் நகரான லாகூரில் பேருந்தில் பயணம் செய்த 50 பேர் பட்டாசு வெடிகள் வெடித்ததில் பலியாகியுள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர். திருமணவைபவம் ஒன்றிற்கு சென்று விட்டுத்திரும்பிக் கொண்டிருக்கையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் தனியார் தொலைக்காட்சியொன்று 50 பேர் வரை உயிரிழந்திருக்காலமெனவும் இருந்த போதிலும் இந்தத் தொகை குறித்து பொலிசார் ஊர்ஜிதம் செய்யவில்லை எனவும் தெரிவித்தது.

பேருந்தில் இருந்த சிறுவன் ஒருவன் பட்டாசு வெடியொன்றைக் கொழுத்தி பேருந்திற்கு வெளியே வீசியதைத் தாம் கண்டதாகவும் அதனைத் தொடர்ந்து பேருந்து தீப்பற்றிக் கொண்டதாகவும் உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலமுதலைமைச்சர் இவ் விபத்துத்தொடர்பான விசாரணை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

## ஈரானில் அணுஆலை அமைக்க அமெரிக்காவுக்கு அழைப்பு

(தெகரான்)

ஈரானின் அணுஆலை அமைப்பதற்கு அமெரிக்காவுக்கு ஈரானின் வெளியுறவுத்துறை அதிகாரி ஹமித்ரேசா அசபி அழைப்பு விடுத்துள்ளார்.

ஈரானில் உள்ள அணுசக்தி ஆலையில் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படலாம் என்று அமெரிக்கா நீண்ட நாட்களாக சந்தேகித்து வருகிறது. ஆனால் ஈரானோ அதில் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறி வருகிறது.

இந்நிலையில் ஈரானில் அணு ஆலை அமைக்கும் வேலையில் அமெரிக்கா உதவ முன்வந்தால் ஈரான் கதவுகள் திறந்தே இருக்கும் என்று ஈரானின் வெளியுறவு அதிகாரி ஹமித்ரோசா அசபி கூறியுள்ளார்.

## உலக மயமாக்கலை எதிர்த்து ஹொங்கொங்கில் ஊர்வலம்

உலக மயமாக்கலை எதிர்த்து ஹொங்கொங்கில் நடந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டுள்ளார்கள்.

உலக வர்த்தகக்கழகத்தின் உச்சி மாநாடு இந்த வாரம் ஹொங்கொங்கில் நடைபெறவுள்ளது. ஊர்வலம் நடைபெற்றபோது கடுமையான பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது ஊர்வலம் அமைதியாக இடம் பெற்றதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உலக மயமாக்கலை எதிர்த்து பாதாகைளும் நிறுவப்பட்டுள்ளன.

அங்கு வேலை செய்யும் பிலிப்பைன்ஸ் இந்தோனிஷியாவைச்சேர்ந்தோரோ இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உலக அழகி



சீனாவில் நடைபெற்ற 2005 ஆண்டிற்கான உலக அழகிப்போட்டியில் 102 நாடுகள் கலந்து கொண்டன. இதில் ஐஸ்லாந்து நாட்டு அழகியான உன்னுர் பிர்னாவில் ஹிஜால் டேர்ட்டிர் உலக அழகியாக தேர்வு செய்யப்பட்டார்.

## ஈராக்கில் வியாழன் பொதுத்தேர்தல்; நேற்று விசேட வாக்களிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் பொதுத் தேர்தல்கள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளன. இதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக இடம்பெறும் விசேட வாக்களிப்பில் நேற்று வைத்தியசாலை நோயாளிகள், சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் கலந்து கொண்டனர்.

ஈராக்கிற்கு வெளியே வேறு நாடுகளில் வாழும் சுமார் 15 இலட்சம் ஈராக்கியர்கள் 15 நாடுகளில் தமது வாக்குகளைச் செலுத்தவுள்ளனர்.

இந்த வாக்களிப்பும் நாளை மறுதினம் மாலை முடிவடையும். இந்த வாக்களிப்புகள் சுமுகமாக நடைபெறுவதற்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையங்களும், நாட்டின் எல்லைகளும் நாளை தொடக்கம் வெள்ளிக்கிழமை அல்லது சனிக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்றும் ஊரடங்குச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது



அவுஸ்திரேலிய தலைநகர் சிட்னியில் இனக்கலவரம் வெடித்துள்ளது. குரோனுல்லா கடற்கரையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நேற்று முன்தினம் கலவரத்தில் ஈடுபட்டனர். அதில் பொலிசார் ஒருவரை கைது செய்த காட்சி

## பப்புவா நியூகினி தீவில் நிலநடுக்கம் வீடுகள் அதிர்ந்தன– சுனாமிப்பீதி

(போர்ட்மோர்சிபி)

பப்புவா நியூகினிதீவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. வீடுகள் அதிர்ந்துள்ளதுடன் சுனாமிப் பீதியும் ஏற்பட்டது.

தலைநகர் போட் மோர்சிபி நகரில் இருந்து 395 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வட கிழக்குப் பகுதியில் திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் 6.5 ரிச்டர் அளவாகப் பதிவானது..நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த நில நடுக்கம் கடலுக்கு அடியில் ஆறு மைல் ஆழத்தில் மையம் கொண்டிருந்தாக அமெரிக்கா, அவுஸ்திரேலிய பூகம்பவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்டதில் அந்தப் பகுதியில் உள்ள கட்ட டங்கள் அதிர்ந்தன. ஒரு சில வீடு களில் விரிசல் ஏற்பட்டது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. உயிரிழப்பும் ஏற்படவில்லை.

ஆனாலும் சுனாமிப் பேரலைகள் ஏற்படலாம் என்ற பீதியால் கடலோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினார்கள். கடந்த 1998 ஆம் ஆண்டு இதே தீவில் ஏற்பட்ட சுனாமித் தாக்கு தலில் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நோபல் பரிசு வழங்கும் விழா

(ஸ்டாக்ஹோம்)

2005 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானிகள் பத்துப்பேருக்கு விருது வழங்கும் விழா ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்றது. சுவீடன் மன்னர் 16ஆம் கார்ல் கஸ்டாப் பரிசுகளை வழங்கினார்.

உலகிலேயே மிக உயரிய விருதான நோபல் பரிசு 1901 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுகள் ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியல், பொருளாதாரம், இலக்கியம், உலக அமைதி ஆகிய துறைகளில் சாதனைபுரிந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பரிசினைப் பெறுபவர்களுக்கு 12இலட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர் பரிசாகக் கிடைக்கும்.

இந்த ஆண்டு இந்தத் துறைகளில் விருது பெறும் சாதனையாளர்களின் பெயர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு விருது வழங்கும் விழா சனிக்கிழமை இரவு நடந்தது.

# ஜேர்மனியில் மாவீரர் நாள் நிகழ்வு....



ஜேர்மனியில் கடந்த சனிக்கிழமை தமிழீழ மாவீரர் நாள் மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சியுடனும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பன்னீராயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தாயக விடுதலைப் போருக்கு தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர். குறிப்பாக 700 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாவீரர் குடும்பங்களும் மக்களும் செயற்பாட்டாளர்களும் தமது வணக்கத்தை செலுத்தினர். இந்நிகழ்வில் கொடியேற்றம், பொதுச்சுடரேற்றம் , மலர்வணக்கம், இசை வணக்கம், நாட்டிய நடனங்கள், விடுதலை நடனங்கள், நாடகங்கள், சிறப்புப் பேச்சுக்கள், சிறுவர் பேச்சு, மேல் நாட்டவர்களின் விடுதலைகான இசை நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# பேரினவாதிகளின் உட்பிரிவினைச் சதியை முறியடிக்க அனைவரும் விழிப்புடன் செயற்படுவோம்

## -மட்டு.மாவட்ட அரசியல்துறை அழைப்பு

(மட்டக்களப்பு)

**இனவாதச் சக்திகளால் வழி நடத்தப்படும் ஆட்சியாளர்களின் புறக்கணிப்புக்களையும், எம்மைப் பிரித்தாள்வதற்காக அவர்கள் மேற்கொண்டுவரும் சூழ்ச்சிகளையும் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளதால் பேரினவாதிகள் உட்பிரிவினைச் சதி ஒன்றை மேற்கொண்டுள்ளனர். அண்மைக் காலமாக நடைபெற்று வரும் சம்பவங்கள் இந்தச் சதி நாடகத்தின் அம்சங்களாகும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையின் முழுவிபரம் வருமாறு;

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஒரு அன்பான அவசர வேண்டுகோள். அடக்குமுறையாலும் இயற்கையின் அனர்த்தங்களாலும் மிகவும் நலிந்துநிற்கும் நமது மாவட்டங்களின் அடிப்படைத் தலையாய பிரச்சினைகள் அநேகம் உள்ளன. போர் ஓய்ந்து நான்கு வருடங்களாகியும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை. எம்மை இரக்கமின்றித் தாக்கிய சுனாமிக்கான நிவாரண நிதிகளைப் பெறுவதிலும் பல முட்டுக்கட்டைகள். நிதியைக் கொடையாளிகள் வழங்கினாலும் அதைப் பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக் கொள்ள இனவாத சக்திகள் தடையாக இருக்கின்றார்கள்.

இனவாத சக்திகளால் வழி நடத்தப்படும் ஆட்சியாளர்களின் புறக்கணிப்புக்களையும் எம்மைப் பிரித்தாள்வதற்காக அவர்கள் மேற்கொண்டு வரும் சூழ்ச்சிகளையும் மக்கள் உணரத் தலைப்பட்டு அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒன்றுபட்டு தங்கள் பொதுவான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயற்சித்தபொழுதில், அபிவிருத்தி மற்றும் அரசியல் காலனித்துவம் சார்ந்த தன் சூழ்ச்சிகள் வெளிப்பட்டு குற்றச்சாட்டுக்கள் தம்மை நோக்கித் திரும்பவிருப்பதை ஊகித்துவிட்ட பேரினவாதிகள் உட்பிரிவினைச் சதியொன்றைச் செய்திருக்கிறார்கள்.

சமூக ரீதியான சங்கடங்களை ஏற்படுத்தும் வகையிலான வதந்திகளைப் பரப்புதல், ஒருதரப்பினர் மீது பழிபோடத்தக்கதான படுகொலைகளைப் புரிதல், இளைஞர்களைத் தூண்டிவிடத் தக்கதான துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல்,பாதுகாப்புத் தருகிறோம் என்ற போர்வையில் வதந்திகளைப் பரப்புதல் என்பன அவர்களின் சதி நாடகத்தின் அம்சங்களாகும்.

மருதமுனையில் தமிழ்ப் பெண்கள் முஸ்லிம்களால் கடத்தப்பட்டதாகவும் அதனால் அந்த வழியாகப் போகவேண்டாம் என்றும் சிறப்பு அதிரடிப்படையினர் வதந்திகளைப் பரப்பியதால் பெரும் பதற்றமும் கொந்தளிப்பும் ஏற்படவிருந்தது. ஆனால், தீர விசாரித்த போது அது திட்டமிட்டுப் பரப்பப்பட்ட வதந்தி என்பது தெரியவந்திருக்கிறது. இவ்வாறான வதந்திகளை இரு தரப்பிலும் உலவவிட்டு அனுதாபம் தெரிவிப்பதுபோல ஆத்திரத்தைத் தூண்டிவிடும் படைப்புலனாய்வு நடவடிக்கை அம்பலமாகியதிலிருந்து இத்தனை பிரச்சினைகளுக்குமான பின்னணிகளை நாம் விளங்கிக் கொள்ள முடியும். ஒன்றாக வாழ்ந்தவர்களும் இனிமேலும் ஒன்றாகவே வாழப்போகின்றவர்களுமான எமது தலைமுறைகளைச் சந்தேகத்தின் பிடியில் விழவிடாது பாதுகாக்க வேண்டியது அனைத்து மதத் தலைவர்களினதும், சமூகத்தின் முன்னோடிகளினதும் கடமையாகும். கடந்து வந்துவிட்ட இருண்ட நாட்களை நோக்கி எமது சமூகங்களை இட்டுச்செல்ல விரும்புபவர்கள் யாரென்றால், முன்னைய கலவரங்களின் போது தங்களின் கைப்பைகளை நிரப்பிக் கொண்டவர்களே. குறுகிய அரசியல் மற்றும் பொருளாதார இலாபங்களுக்காக தலைமுறை தலை முறையாகப் பாதிப்பைத் தரக்கூடிய கசப்புணர்வுகளுக்குள் நமது பிள்ளைகளை யாரும் இட்டுச்செல்வதை, அது யாராக இருந்தாலும், அவர்களைத் தார்மீக சக்திகள் இணைந்து முறியடிக்க வேண்டும். வரலாற்றையும், தரைத்தோற்ற மற்றும் குடிப்பரம்பல் யதார்த்தங்களையும், பொருளாதார மற்றும் மொழி சார்ந்த பின்ன ணிகளையும் கருத்தில் கொள்ளாது சாத்திய அசாத்தியங்களை யும் ஆராயாது பொறுப்புணர்ச்சியற்ற விதத்தில் வேற்றுமைக் கருத்துக்களை முன்வைப்போரின் பின்புலங்களை நாம் இனங்காண வேண்டும். அந்நிய சக்திகளின் தூண்டுதல்களுக்கு மத்தியிலும் மோசமான விளைவுகளை ஏற்பட்டுவிடாது தடுத்துநின்ற தார்மீக சக்திகள் அனைத்துக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். இதுவரைக கும் தெளிவான முடிவுகளிலும் நிலைப்பாட்டிலும் உறுதிகாட்டிய பள்ளிவாசல் சம்மேளனத்தின் உறுதியைப் பாராட்டுகின்றோம். வடகிழக்கிலுள்ள தமிழ்பேசுகின்ற அனைவருக்குமான பன்முகப்பட்ட விடுதலைக்கான போராட்டமொன்றையே எமது தேசியத் தலைவர் முன்னெடுத்து வருகிறார். தீர்விற்கான எமது அனைத்து முயல்வுகளும் இங்கு வாழும் அனைவரினதும் அபிலாசைகளையும் தனித்துவங்களையும் ஆதங்கங்கங்களையும் அடியொற்றியதாகவே இருக்கும் என்பதை அவர் தெட்டத்தெளிவாகத் தெரிவித்துமிருக்கிறார்.

ஒருமித்த முயல்விற்கான இந்தப் பொழுதில் சந்தேகங்களைக் களையும் விதமான மனம் திறந்த தொடர்பாடல்களே தேவை. ஒற்றுமைக்கெதிரான சக்திகளின் சதிகளைச் சத்திய சோதனையென எதிர்கொள்வோம். சுதந்திரமான முன்னேற்றம் பெற நாம் அனைவரும் கை கோர்த்து அணிதிரள்வோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டில் குழந்தை காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கறுவாக்கேணியில் உள்ள வீடொன்றின்மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று காயமடைந்துள்ளது. நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் வீட்டின் முன் ஆள்நடமாட்டம் இருப்பதை அவதானித்த குழந்தையின் தாய் வீட்டின் வெளியே வந்தபோதே இந்தத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் மேற்படி குழந்தை காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வட்டக்கச்சி ம.வி.யில் ஒளிவிழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை ஒளிவிழா நிகழ்வு கிறிஸ்தவ மாணவர் மன்றத்தலைவர் அல்பிரட் டிலக்ஷி தலைமையில் ஆரம்பமாகியது.மங்கலவிளக்கினை பாடசாலையின் அதிபர் இ.சந்திரராஜா ஏற்றி வைத்தார் அதனைத்தொடர்ந்து ஆசியுரையினை வண. பிதா அன்ரன் ரொக் வழங்கினார். அத்தோடு கருத்துரைகளை பாடசாலையின் முதல்வர் நிகழ்த்தியதோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பாடசாலை மாணவர்களின் பாடல், ஆங்கிலப்பாடல், நடனம், நாடகம் போன்ற சில கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்நிகழவில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கிறிஸ்தவமத பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதே போன்ற ஒளிவிழா நிகழ்வுகள் ஏனைய பாடசாலைகளிலும் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.(12)

# வீடமைப்புத் திட்டங்களை உலகவங்கிப் பிரதிநிதிகள் பார்வை

(மன்னார்)

மன்னாரில் உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்புத்திட்டங்களை அவ்வங்கிப்பிரதிநிதிகள் கடந்த வாரம் வருகை தந்து பார்வையிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட அவர்கள் தலைமன்னார் பியர், புதுக்கமம், பேசாலை, சாந்திபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று அபிவிருத்தித்திட்டங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (18)

# பயணிகள் பேருந்துச் சேவை வீதி சீரின்மையால் நிறுத்தம்!

(ஸ்கந்தபுரம்)

ஸ்கந்தபுரம், கோணாவில் இணைப்பு வீதி அண்மையில் பெய்த பெரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதனால் இதனூடாக பயணிகள் பேருந்து சேவையெதுவும் இடம்பெறாமையினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.அண்மையில் பெய்த மழை காரணமாக அக்கராயன்குள வால்கட்டு உடைப்பெடுத்து ஓடியதால் இவ் வீதி முற்றாக பயன்பாட்டிற்குதவாத நிலையில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையால் பயணிகள் பேருந்து சேவை இவ் வீதியூடாக இடம்பெறுவதில்லை. இதனால் மக்கள் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் கால்நடையாகவே செல்ல வேண்டியுள்ளது. (கா)

# மன்னார் மாவட்ட விவசாய நடவடிக்கைகள்; த.பொ.மே.நிறுவனத் தலைமையில் ஆராய்வு

மன்னார் மாவட்டத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆண்டாங்குளம் பகுதியில் அமைந்துள்ள நிறுவன மண்டபத்தில் மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

2005 ஆம் ஆன்ரு நடைமுறைப்படுத்திய வேலைகள் தொடர்பாகவும், 2006 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைகள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகளும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மன்னார் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இனியவன், விவசாயத்திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், அரசதுறைசார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (46)

# ஏறாவூரில் புதிய கடற்படை முகாம் படையினரின் பாரிய யுத்தநிறுத்த மீறல்!

## -தமிழ்தேசியக் கூட்டமைப்புக் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கடற்படை முகாம் அமைக்கப்படவுள்ளமையானது போர்நிறுத்த மீறல் என தமிழ்தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கமைய, எந்தவொரு தரப்பினாலும் புதிய முகாமொன்றினை அமைக்க முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமைகளின் மத்தியில், மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் புதிய கடற்படை முகாமொன்றை அமைப்பதற்கு பாதுகாப்பமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையானது பாரிய யுத்தநிறுத்த மீறலெனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கம் யுத்தமொன்றுக்கான முனைப்புடனேயே செயற்படுவதை அவதானிக்க முடிவதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டகளப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மேலும் கூறினார்.

# குடாநாட்டில் கனரக ஆயுத தளபாடங்களை முன்னரங்க நிலைக்கு மாற்றும் படையினர்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடா நாட்டை ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினர் போருக்கு தம்மைத் தயார்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். புதிய பாதுகாப்பு நிலைகளை அமைத்துவரும் படையினர், முன்னரங்க நிலைகளிற்கு கனரக ஆயுத தளபாடங்களையும் நகர்த்திவருகின்றனர்.**

குறிப்பாக வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட வடமராட்சிப் பகுதிகளில் படையினர் புதிய நிலைகளை அமைத்து வருவதுடன் காவலரண்களையும் பலப்படுத்திவருகின்றனர்.

நாகர்கோவில், முகமாலை, கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதிகளில் புதிதாக பதுங்கு அகழிகளையும் அமைத்து வருகின்றனர்.

பலாலி படைத்தளத்திலிருந்து கனரக ஆயுத தளபாடங்களும் முன்னரங்கப் பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டு வருகின்றன. தமது ஆயுத தளபாட நகர்த்தல் பற்றி படைத்தரப்பினர் கருத்து வெளியிடுகையில்; தாங்கள் போருக்குத் தயாராக வில்லை என்றும் போர் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவே ஆயுத தளபாடங்கள் போர் முனைகளிற்கு நகர்ததப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை கடந்த 3ஆம்,4ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் அரச தாதிமார் சங்கத்தின் ஏற்பாட்டில் இயற்கை அனர்த்தம் மற்றும் அனர்த்த காலங்களில் உடனடி அவசர சேவைகள் மேற்கொள்வது குறித்து தாதியர் சங்கத்தலைவர் சமன்ரத்னபிரிய தலைமையில் மேற்படி பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

யாழ். மாவட்டவைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் வைத்திய சேவை ஊழியர்கள் உட்படஒவ்வெரு வைத்தியசாலைகளிலிருந்தும் இருவர்வீதம் 65 பேர் மேற்படி இருநாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

கொழும்பு தேசியவைத்தியசாலை பிரதமதாதிய பரிபாலகர் கபிலசேன உதவி தாதிய பரிபாலகர்கள் இராஜகேசரி, ஜேசுதாசன் ஆகியோர் பயிற்சிப் பட்டறையில் கலந்து அனர்த்த முகாமைத்துவக் கருத்துரைகளை வழங்கினர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்கனவே மேற்படி பயிற்சிப்பட்டறை நடைபெற்றுள்ளதுடன் 2006ஆம் ஆண்டு சனவரிமாத நடுப்பகுதியில் இம்முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை கிளிநொச்சிவைத்தியசாலையில் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றதென அரச தாதியர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார். (சோ)

## மூதூரில் தொடரும் தாக்குதல் க.பொ.த.சாதாரண மாணவர்கள் பாதிப்பு

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மூதூர் பிரதேச கலைமகள் இந்துக் கல்லூரி மாணவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோப்பூர் பிரதேச அல்கம்றா பாடசாலையில் பரீட்சை எழுதுவதற்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தோப்பூர் பிரதேசங்களில் கடந்த வாரம் இடம் பெற்ற இனவன்முறைச் சம்பவங்களினால் பதற்ற நிலை இன்னும் நீடிக்கின்றது. இதனால் தமிழ் மாணவர்கள், முஸ்லிம் பகுதிகளுக்குச் சென்று பரீட்சை எழுதமுடியாதநிலை தோன்றியுள்ளது.

இதனை நிவர்த்திக்கும் முகமாக இப்பரீட்சார்த்திகள் மூதூர் கிழக்கு கனகபுரம் மத்திய கல்லூரியில் பரீட்சை எழுதுவதற்கு திருகோணமலைப் பரீட்சை நிலையத்திற்கு பொறுப்பான கல்விப் பொறுப்பாளரும், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளருமான, கு. திலகரெத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார். இதே போன்று சேனையூர், சம்பந்தர், கூனித்தீவு போன்ற பகுதிகளில் உள்ள பரீட்சைக்கு விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மூதூருக்குச் சென்று பரீட்சை எழுத முடியாத காரணத்தினால் இவர்கள் பரீட்சை எழுதுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் கனகபுரம் மத்திய கல்லூரிக்குச் சென்று பரீட்சை எழுத முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துச் சேவைக்கு தனியான பிரிவு தேவை

*– வைத்தியசாலை நிர்வாக அதிகாரி வலியுறுத்து*

யாழ்.போதனா வைத்திய சாலையில் விபத்துச் சேவைக்கென தனியான ஒரு பிரிவு நவீன வசதிகளுடன் அமைக்கப்படுவது அவசியம் என இவ்வைத்திய சாலையின் நிர்வாக அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.குடாநாட்டில்தற்போது விபத்துக்களும் அனர்த்தங்களும் அதிகரித்துள்ளன.

இவற்றில் பாதிக்கப்பட்டும் காயங்களுக்குள்ளாகியும் தாக்கங்களுக்குள்ளாகியும் வருவோரிற்கு உடனடியாக தீவிர சிகிச்சை வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது. எனினும் இந்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துச் சேவைப் பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

இந்நிலமையினை கருத்திற்கொண்டு யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரதான வாயிலுக்கு சமீபமாக புதியகட்டடமொன்று அமைக்கப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய விபத்துச் சேவைப் பிரிவொன்றை அமைக்க வேண்டியது அவசியமாகுமெனவும் அவர் தெரிவித்தார். (33)

## சாரதிஅனுமதிப்பத்திர செயற்பாடுகள் வரும் 2 ஆம் திகதிவரை இடைநிறுத்தம்

2005 ஆம் ஆண்டு இறுதிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களை கையேற்றல் ஆகிய செயற்பாடுகள் யாவும் நாளை முதல் இடைநிறுத்தப்படுவதுடன் திணைக்களத்தின் ஏனைய செயற்பாடுகளும் எதிர்வரும் 23.12.2005 தொடக்கம் இடைநிறுத்தப்படவுள்ளது என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார். திணைக்களத்தின் சகல செயற்பாடுகளும் மீண்டும் வழமைபோல் 2006.01.02 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும். எனினும் 2005 டிசம்பர் மாதத்தில் எழுத்துப்பரீட்சை, செயன்முறைப்பரீட்சை ஆகியவற்றுக்கு திகதி வழங்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அப்பரீட்சைகள் வழங்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (28)

## உயர்பாதுகாப்பு வலயத்திற்குச் செல்வோர் மீது படையினர் கடும் சோதனைக்கெடுபிடி

வலி. வடக்கில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்பவர்கள் மீது இராணுவத்தினர் கடும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் தற்போது தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, புற்று நோய் வைத்தியநிலையம் என்பனவற்றுடன் கூல எயார் மின் விநியோக நிறுவனம், பெட்ரோலியக் கூட்டுத்தாபனக் கிளை என்பனவும் இயங்கிவருகின்றன.

# யாழில் கொட்டும் மழையிலும் இராணுவத்தினர் சோதனைக் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் தொடர்ச்சியாக பெய்த மழையிலும் கூட இராணுவத்தினர் பொது மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளைத் தளர்த்தவில்லை. வீதிகளில் மிகவும் நெருக்கமாக காவலுக்கு நின்ற அதிக எண்ணிக்கையான இராணுவத்தினரால் பொது மக்களிடம் சோதனை உள்ளிட்ட பல்வேறு கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் வீதியோரங்களில் நிறை மரங்களின் கிளைகளை வெட்டும்படி மக்களை வற்புறுத்தியுள்ளனர். அடை மழையின் மத்தியிலும் மக்கள் வீதியோர வேலிகளில் நின்ற மரங்களின் கிளைகளை வெட்டினார்கள். கடந்த சில நாட்களாக இராணுவத்தினர் மிகவும் நெருக்கடிகளை பொது மக்கள் மீது ஏற்படுத்துவதுடன் துன்புறுத்தியும் வருகின்றார்கள்.

பொது மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் இத்தகைய செயற்பாடுகளையிட்டு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவிப்பதுடன் வெகுவிரைவில் இராணுவத்தினருக்கு எதிராக பொது மக்கள் போராட்டங்களிலும் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (41)

## கொட்டும் மழையிலும் தமது பாதுகாப்பிற்காக காணிகளைத்துப்புரவு செய்ய படையினர் உத்தரவு

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினர் கொட்டும் மழையிலும் தமது பாதுகாப்புக்காக பொது மக்களை காணிகளை துப்புரவு செய்யும்படி வலியுறுத்தி வருகின்றார்கள். வீதியோரங்களில் காணப்படும் வேலிகளில் உள்ள குழைகளை அகற்றும் படி வலியுறுத்துவதனால் மக்கள் பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

கடந்த வாரத்தில் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதல்களைத் தொடர்ந்து பொது மக்கள் மீது இராணுவத்தினர் இத்தகைய அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங் கியுள்ளார்கள்.

இதனால் பல இடங்களில் வேலிகளில்வெட்டப்படும் குழைகள் பயன்பாடு இல்லாது போவ துடன் வேலிகளும் பாதிப்படைகின்ற நிலமையும் ஏற்பட்டுள்ளது.

வயது போனவர்கள் கூட இத்தகைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். வயல்கள் தோட்டங்களுக்குப் போடவேண்டிய இயற்கைப் பசளை இராணுவத்தினரின் நெருக்கடியின் கீழ் வெட்டப்படுவதினால் யாருக்கும் பயன் இல்லாது போகின்ற நிலமை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நெருக்கடி களை வேண்டும் என்றே இராணுவத் தினர் மேற்கொண்டு வருகின்றார்கள் என பொது மக்கள் கூறுகின்றார்கள்.

## யாழ்.சம்பவங்கள் குறித்து விசாரிக்க சனாதிபதி ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கு இருவர்கொண்ட குழு சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

அண்மை நாட்களாக யாழ்குடாவில் படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திரதாஸ நாணயக்கார இக்குழுவின்தலைவராகவும் இலங்கையின் முன்னாள் சவுதி அரேபியத் தூதுவர் யாதிக்யுசுப் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சண்டைப் பயிற்சியில் ஈடுபடும் காரைநகர் கடற்படையினர்

யாழ்.காரைநகர் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் இரவு நேரங்களில் மேற்கொண்டுவரும் சண்டைப்பயிற்சிகளால் ஏற்படும் வெடியோசைகள், மற்றும் குண்டுவீச்சுச் சத்தங்கள் என்பன அப்பகுதி மக்களை பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அத்துடன் அப்பகுதி கடற்றொழிலாளர்களும் தம் தொழில் நடவடிக்கைக்கு இரவு வேளைகளில் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். இது இவ்வாறு இருக்க காரைநகர் கடற்கரையோரங்களில் உள்ள காவலரண்களையும் புனரமைக்கும் பணிகளிலும் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# யாழ்ப்பாணத்தில் அடைமழை காரணமாக 3000இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடப்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெய்த அடைமழை காரணமாக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடப் பெயர்வுக்குள்ளாகியுள்ளனர். தாழ்ந்த நிலப் பகுதிகளில் குடியிருந்தோரே இவ்வாறு பாதிக்கப்பட்டு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கொழும்புத்துறை, குருநகர், பொம்மைவெளி, ஆனைக்கோட்டை, நல்லூர், நந்தாவில் நல்லூர் முத்திரைச் சந்தை, செட்டியா தோட்டம், தலையாளி, உடுவில், ஆலடி,தாவடி, சண்டிலிப்பாய், கல்வளை, தெல்லிப்பழை மற்றும் தீவகத்தின் பல இடங்களிலும், வடமராட்சி, தென்மராட்சி கோட்டங்களில் சில இடங்களும் வெள்ளத்தின் தாக்கத்திற்குப் பொது மக்கள் உள்ளாகியுள்ள போதிலும் இது சம்பந்தமாக உரிய பிரதேச செயலகங்களின் அலுவலர்கள் சென்று பார்வையிடவில்லையென பல இடங்களில் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

அண்மையில் பெய்த மழையின் போது கூட உரிய நேரத்தின் போது கிராம அலுவலர்கள் சென்று பார்வையிடாது, பின்னர் காலம்தாழ்த்தியே சென்று பார்வையிட்டதாகவும் பொது மக்கள் குறை கூறுகின்றனர்.

மழை பெய்து பலமணி நேரம் சென்ற போதிலும் பொது மக்களின் இடங்களுக்குச் செல்ல உரிய கிராம அலுவலர்கள் ஞாயிற்றுக் கிழமையெனக் காரணம் கூறி தட்டிக்கழித்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (41)

# சுதந்திரக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

## -முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளதே காரணம்

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உட்பூசல் தீவிரமடைந்துள்ளதால் கட்சி பிளவை நோக்கிச் செல்வதாகத் தகவல்கள் வெளியாகியுள் ளன. இந்நிலையில் நேற்று நடைபெறவிருந்த சுதந்திரக்கட்சியின் செயற் குழுக் கூட்டமும் மறுதிகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி போடப்பட்டுள்ளது.**

கட்சியின் தலைவரான முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் செயற்பாடுகளைக் கட்சியின் ஒரு பிரிவினர் கட்டுப்படுத்த முயல்கின்றனர். அதாவது சனாதிபதி மகிந்தராஜ பக்ஷவை ஆதரிப்போர். சந்திரிகாவை தலைமைப் பதவியி லிருந்தும் அரசியலிலிருந்தும் ஓரம்கட்ட தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் தனது தற்போதைய நிலையைத் தக்கவைத்துக்கொள்ள சந்திரிகா பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றார்.

இந்நிலையில் கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்றைய தினம் கூட்டப்படவிருந்த போதிலும் அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமை யில் நடைபெறவிருந்த இந்த கூட்டத்தில் பாராளுமன்றத்தில் காலியாக உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி தொடர்பாக கலந்துரை யாடப்படும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரகட்சியின் தலைமைத்து வத்தை சனாதிபதி மகிந்தராஜபக்ஷவிற்கு வழங்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் தீர்மானங்களை எடுப்பது இராணுவத்தினரின் கடமையல்ல!

## -பிரதமர் அறிவுறுத்து

(கொழும்பு)

அரசியல் தீமானங்களை எடுப்பது இராணுவத்தின் பொறுப்பாகாது என சிறிலங்காப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டை பாதுகாப்பதே இராணுவத்தினரின் கடமை என அவர் கூறினார்.

அரசியல் தீமானங்களை அரசியல்வாதிகளே மேற்கொள்வர் என தெரிவித்த பிரதமர் சமாதான செயற்பாடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சனாதிபதி சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவித்தார். சமாதான செயற்பாடுகளில் அனுசரணையும் போர் நிறுத்த கண்காணிப்பும் ஒரே நாட்டினால் மேற்கொள்ளபடக் கூடாது என்பதே சனாதிபதி யின் கருத்து எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.பண்டாரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். (32)

# புரிந்துணர்வுடன் செயற்பட்டு சமாதானப்பேச்சுக்கள் முன்னெடுப்பு

## *–அமைச்சர் டி.எம். ஜயரத்ன கூறுகிறார்*

(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டு சமாதான பேச்சுவார்த்தைகளை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பிப்பார் என அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார். சமாதான நடவடிக்கை கள் திறன்மிக்கதாக ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். சமாதான நடவடிக்கைகள் குறித்தும் சனாதிபதி மீதும் எதிர்கட்சி குற்றம் சுமத்துவது சம்பிரதாயபூர்வமான அரசியல் லாபம் கருதியே எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

# சட்டவிரோத மதுபானம் அருந்தி உயிரிழந்தோர் 13 ஆக உயர்வு

## -பாதிக்கப்பட்டோரில் பலர் பார்வையிழப்பு

(கொழும்பு)

மாத்தறை பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது. சட்டவிரோத மதுபானம் அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றுமொருவர் நேற்று முன்தினமிரவு உயிரிழந்ததாக மாத்தறை வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கே.ஐ. பத்மதிலக்க தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் பாதிக்கப்பட்ட மேலும் எட்டுப் பேர் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 65 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு கண்பார்வை பாதிப்படைந்துள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார். சட்டவிரோத மதுபானத்தை விற்பனை செய்த பெண்ணை கைது செய்துள்ளதாக மாத்தறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ். கருணாநாயக்க தெரிவித்தார்.மேற்படிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டிருந்த மதுவரித்திணைக்கள அதிகாரியும்மரணமாகியுள்ளனர்.

# ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெலஉறுமயவும் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்

## -எதிர்க்கட்சித்தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மைக்கால தாக்குதல்களி னால் 17 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். சனாதிபதித் தேர்தலின் போது பொய்களால் மக்களை ஏமாற்றி இத்தகையதொரு நிலையை நாட்டில் ஏற்படுத்தியமை தொடர்பில் ஜே.வி. பியும்,ஜாதிகஹெல உறுமயவும் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் யுத்தநிறுத்த உடன்படிக்கை யைத் திருத்தி நோர்வே வெள்ளைப் புலிகளை விரட்டியடிப்பதாக கூறிய ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறும யவும் இப்போது அந்த உடன்படிக் கையை ஏற்பதனால் கிராமம் கிராமமாகச் சென்று தாங்கள் பொய் கூறியதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அநுராதபுரம் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி செயற்பாட்டாளர்களைச் சந்தித்த போதே எதிர்க்கட்சித்தலை வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் நாங்கள் தேர்தலுக்கு முன்னதாக நாட்டைப் பிளவுபடுத்தப் போவதாக கூறிவந்தனர். எனினும்யார் உண்மையைக் கூறினார்கள் என் பது இன்று நாட்டிற்குத்தெரியவந் துள்ளது. ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் நாட்டிற்குப் பொய் கூறி வந்தது இன்று உறுதியாகியுள்ளது.

நாங்கள் இரகசிய உடன்படிக் கையை கைச்சாத்திட்டுள்ளதாக கூறியபோதிலும் அரசாங்கத்தில் இருக்கும் யாரோ இரகசிய உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர் என்ற கருத்து இன்று மக்கள் மனங் களில் உள்ளது.அழிக்க வேண்டும் எனக் கூறிய உடன்படிக்கையை இன்று நல்லதெனக் கூறி ஜே.வி. பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இன்று இந்த தேவாலயத்தை வணங்கி வருகின்றனர்.

இராணுவத்தினர் கொல்லப்பட்ட போது இராணுவத்தை முன்னோக்கி அனுப்பப் போவதாக கூறிய அவர் கள் வெள்ளைப்புலிகளென அவர்க ளால் வர்ணிக்கப்பட்ட நோர்வே பிரதி நிதிகளை வன்னிக்கு அனுப்பியுள்ள னர் என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய மருந்துகளுக்கான கொள்கையினூடாக மருந்து இறக்குமதி, விநியோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்

(கொழும்பு)

தேசிய மருந்துகளுக்கான கொள் கையின் ஊடாக மருந்து இறக்குமதி மற்றும் விநியோகம் என்பன கட்டுப் படுத்த வேண்டுமென அரசாங்க வைத் திய அதிகாரிகள் சங்கம் தெரி விக்கின்றது.

பிரகோன் மற்றும் சீ பென்சிலின் என்பன நோயாளர்களுக்கு வழங்கப் படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட் டமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அரசாங்க வைத்திய அதிகாரி களின் சங்கத்தின் செயலாளர் வைத் தியர் உஜித்த ஹேரத் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

பல வைத்தியசாலைகளில் இந்த மருந்துகள் கொடுக்கப்பட்டதால் நோயாளர்களுக்கு பக்கவிளைவுகள் ஏற்பட்டதால் சீ-பென்சிலின் மற்றும் பிரகோன் மருந்துகள் வழங்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்திய சாலை மற்றும் கராப்பிட்டிய வைத் தியசாலைகளில் இந்த மருந்துகள் கொடுக்கப்பட்டதால் இரண்டு நோயா ளிகளின் கைகள் துண்டிக்கப்பட்டன.

கொழும்பு தேசிய வைத்திய சாலைகளில் ஆறு நோயாளர்கள் இந்த பக்கவிளைவுகள் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் யானைக்கால் நோய்க்கு சிகிச்சை பெற்ற பெண் நோயாளியின் கை துண்டிக்கப்பட்ட விடயம் தொடர் பான ஆரம்ப விசாரணைகள் முடி வடைந்துள்ளதாக வைத்தியசாலை யின் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

இதன் மூலம் குறித்த நோயாளி யின் கை துண்டிக்கப்பட்டமைக்கு வைத்தியரோ, தாதியோ காரண மில்லை என்பது தெரியவந்துள்ளதாக சுகாதாரசேவை தொழிற்சங்க கூட்ட மைப்பின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இந்த நிலையில் மருந்து கொடுக் கப்படும் முறையில் எதேனும் தவறு கள் நேர்ந்தால் இவ்வாறான பக்க விளைவுகள் ஏற்படலாம் என சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அத்துலகாந்தலியனகே தெரிவித்தார்.

பென்சிலின் மருந்துகளினால் எந் தப் பாதிப்பும் ஏற்படவில்லை என விசா ரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுளளதாகவும் அவர் குறிப்பிட்டார்.(32)

# வாகன விபத்தில் காயமுற்ற வைத்தியர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடுவலை நவகமுவ வெலஹேந்தியப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒருவர் உயிரிழந்துள்ளதாக கடுவலை பொலிசார் தெரிவித் துள்ளனர் உந்துருளி ஒன்றுடன் பாரவூர்தி மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உந்துருளியில் பயணித்த பழனிவேல் கார்த்திகேயன் என்ற 49 வயதான வைத்தியர் ஒருவரே உயிரிழந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் லிந்துலை வோல்ட்ரின் தோட்டத்தில் கடமையாற்றும் வைத்தியர் ஆவார். (32)

# நிதி தடுப்பு

(கொழும்பு)

கலாசார முக்கோண பிரதேசத் திற்கு வருகை தரும் சுற்றுலா பயணி களினால் கிடைக்க வேண்டிய நிதியை சில தனியார் நிறுவனத்தி னர் தடுத்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

சுற்றுலா முக்கோண மையங்களை பார்வையிடவரும் சுற்றுலா பயணி களிடம் விநியோகிக்கும் அனுமதி சீட்டுகளுக்கு பெறுமதிசேர் வரி அற விடப்படுகிறது. எனினும் இந்த நிதியை திரட்ட இதுவரை எதுவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. இதனால் அரசாங் கத்திற்கு 169 மில்லியன் ரூபா கிடைக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (32)

## -எழுத்துமூல உறுதிமொழியை அடுத்து-

# தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் சி.எம்.பார்த்தலட் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு அளித்த உறுதிமொழியையடுத்து கைதிகளின் உண்ணாவிரதப்போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இவர்கள் சிறைச்சாலை கூரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எழுத்து மூலம் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டதையடுத்து இப்போராட்டம் இடை நிறுத்தப்பட்டது. தலைமையுடன் தொடர்புகொண்டு உரிய பதிலை எதிர்வரும் 19 ஆம் திகதி தான் கொண்டு வருவதாக இணைப்பதிகாரி அந்த உறுதி மொழியில் தெரிவித்துள்ளார்.

# ஹிங்குராங்கொடவில் வீதிவிபத்து 33 பேர் காயம்; மூவர் கவலைக்கிடம்!

(கொழும்பு)

ஹிங்குராங்கொடவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 33 பேர் காயமடைந்த நிலையில் ஹிங்குராங்கொட மற்றும் பொலன்னறுவ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவையில் அனுமதிக்கப்பட்டுள்ள 11 பேரில் மூவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக மருத்துவத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பயணிகள் பேருந்து ஒன்று பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட பொழுது சாரதி கட்டுபாட்டை இழந்ததன் காரணமாக பயணிகள் பேருந்து குடைசாய்ந்ததை அடுத்தே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)



# விளையாட்டு அரங்கு



# சாதனையாளர் டெண்டுல்கர்

**சதம்** அடிப்பதே பெரிய சாதனை அதிலும் ஒரு சாதனையா என்றால் பிரமிப்பாக இருக்கிறதல்லவா.

டில்லி டெஸ்ட் போட்டியில் அந்தப் பெருமைக்குரிய சாதனையை இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நிலைநாட்டியுள்ளார்.

சக நாட்டவரான கவாஸ்கரின் கடைசி டெஸ்ட் சதமான 34ஆவது சதம் (1986 இல் கான்பூரில் மேற்கிந்திய தீவுக்கு எதிராக பெறப்பட்டது.) முறியடித்ததன் மூலம் சச்சின் இந்தச் சாதனைக்குரியவரானார்.

1989 இல் தனது 16 ஆவது வயதில் பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் அரங்கேற்றம் கண்ட சச்சின் முதல் டெஸ்ட் சதத்தை 1990 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக மான்செஸ்டரில் நடைபெற்ற போட்டியில் பெற்றார்.

கடந்த பல மாதங்களாக காயத்துக்குள்ளாகி போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் அவதிப்பட்ட சச்சினுக்கு மேற்படி சாதனை சதம் நெருக்கடியான ஒன்றாக இருந்ததுடன் அவரது இயல்பான ஆட்டத்துக்கும் டில்லி டெஸ்டில் தடையாக இருந்தது. இந்த நிலையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சச்சின் சாதனைச் சதத்தை எட்டியதுடன் நெருக்கடியிலிருந்து மீண்டார்.

இதுவரை 125 டெஸ்ட்களில் 10256 ஓட்டங்களை பெற்றுள்ள சச்சின் 41 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார். இதனைவிட ஒரு நாள் போட்டியிலும் அதிக சதங்களாக 38 பெற்றுள்ள சச்சின் 13,909 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில் அவரது சாதனைப் பயணத்தை கவாஸ்கருடன் ஒப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

ஒப்பீட்டளவில் அவர்கள் இருவரையும் பார்ப்போமானால் முதல் இருபது போட்டியில் கவாஸ்கர் ஆறு சதம். டெண்டுல்கர் நான்கு சதம்.

60 டெஸ்ட் போட்டியில் கவாஸ்கர் 22 டெண்டுல்கர் 15 சதம் 80 டெஸ்ட் காவஸ்கர் 25 டெண்டுல்கர் 24 சதம்.

நூறு போட்டியில் கவாஸ்கர் 30 டெண்டுல்கர் 30 சதம் 119 போட்டியில் இருவரும் 34 சதம் 125 போட்டி யில் கவாஸ்கர் 34 டெண்டுல்கர் சாதனையை முறியடித்து 35 சதம்.

இவ்வாறு இவர்களின் சதங்கள் சென்று கொண்டிருக்க நாடுகளுக்கு எதிராக இவர்கள் இருவரும் பெற்றுக் கொண்டதை பார்ப்போமானால்.

கவாஸ்கர் அவுஸ் அணிக்கு எதிராக 20 போட்டியில் எட்டு சதம், டெண்டுல்கர் 21 போட்டியில் ஏழு சதம், இங்கிலாந்துக்கு எதிராக கவாஸ்கர் 38 போட்டி நான்கு சதம், சச்சின் 16 போட்டியில் ஆறு சதம், நியூசிலாந்துக்கு எதிராக கவா. .ர் ஒன்பது போட்டியில் இரண்டு சதம், சச்சின் 16 போட்டியில் மூன்று சதம்.

பாகிஸ்தானுக்கு எதிராக கவாஸ்கர் 24 போட்டியில் ஐந்து, சச்சின் 13 போட்டியில் இரண்டு, சிறிலங்கா அணிக்கு எதிராக ஏழு போட்டியில் கவாஸ்கர் இரண்டு டெண்டுல்கர் 15 போட்டியில் ஏழு சதம், மே.தீவுக்கு எதிராக 27 போட்டியில் கவாஸ்கர் 13 சதம், சச்சின் 16 போட்டியில் மூன்று சதம், தென்னபிரிக்கா பங்களாதேசுக்கு எதிராக கவாஸ்கர் பங்கேற்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. டெண்டுல்கார் பங்களாதேஷ் அணிக்கு எதிராக ஒரு சதம் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 14 போட்டியில் மூன்று சதம் சிம்பாவேக்கு எதிராக ஒன்பது போட்டியில் மூன்று சதம்.

அணி வெற்றிபெற்ற சதவீதத்தை பார்த்தால் டெண்டுல்கரின் 11 சதங்கள் வெற்றிக்கு உதவியுள்ளன.

கவாஸ்கரைப் பொறுத்து ஆறு சதமே வெற்றிக்கு உதவியுள்ளது. டெண்டுல்கர் எட்டுப் போட்டியில் சதம் பெற்றும் இந்தியா தோல்வி அடைந்துள்ளது. கவாஸ்கருக்கு ஆறு சதங்கள் தோல்வியாக அமைந்தன.

வெற்றி தோல்வியற்ற முடிவுக்கு டெண்டுல்கர் பெற்ற 15 சதங்கள் உதவியுள்ளன கவாஸ்கருக்கு 22 சதங்கள் அவ்வாறான பெறுபேற்றை வழங்கியுள்ளன.

டெண்டுல்கர் முதல் இனிங்சில் 26 சதங்கள் கவாஸ்கர் முதல் இனிங்சில் 23 சதம்.

இரண்டாவது இனிங்சில் கவாஸ்கர் 17 சதம் டெண்டுல்கர் ஒன்பது சதம்.

நாணயச் சுழற்சியில் வென்றபோது சச்சின் 21சதத்தையும், கவாஸ்கர் 18 சதத்தையும் பெற்றுள்ளனர் நாணயச்சுழற்சியில் தோல்வியடைந்தபோது சச்சின் 14 போட்டியில் சதம. கவாஸ்கர் 16 போட்டியில் சதம்

சொந்த நாட்டில் இருவரும் 16 சதத்தை பெற்றுள்ளனர். வெளிநாட்டில் கவாஸ்கர் 18 டெண்டுல்கர் 19 சதம். இருவரும் வெளி நாட்டிலேயே அதிக சதங்களை பெற்றுள்ளனர். இவ்வாறாக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஒரு நாள் டெஸ்ட் என 73 சதங்களைப் பெற்றுள்ள சச்சின் முறியடிக்கப்பட முடியாத சதங்களின் சாதனையாளராகத் திகழ்வார் என்பது திண்ணம்.

(இ.சியான்)

# புதிய வேகம்

**உறுதியுடன்** ஆடினால் எத்தகைய இலக்கையும் அடையலாம் என்பதற்கு நியூசிலாந்து கிரிக்கெட் அணி ஓர் எடுத்துக்காட்டு.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 332என்ற வெற்றி இலக்கை கடந்ததன் மூலம் மிகப்பெரிய இலக்கை (330) ஓட்டத்தை கடந்து வெற்றி பெற்ற அவுஸ்திரேலியாவின் முந்தைய சாதனையை நியூசிலாந்து அணி முறியடித்து புதிய சாதனை படைத்தது.

நியூசிலாந்துக்குசுற்றுலா மேற்கொண்டுள்ள பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி மூன்று ஒரு நாள் போட்டியில் பங்கேற்றது.

இதன் முதல் போட்டியில் சிறப்பான வெற்றியை பெற்ற அவுஸ்திரேலியா இரண்டாவது போட்டியில் 322 ஓட்டங்களை குவித்து பலமான நிலையை பெற்றது. ஆனால் இதனையும் அதிரடியாக துரத்திச் சென்ற நியூசிலாந்து வீரர்கள் இரண்டு ஓட்டத்தால் வெற்றியை தவறவிட்டனர்.



இந்த நிலையில் மூன்றாவது போட்டியில் 331ஓட்டங்களைஅவுஸ்திரேலியா பெற்ற நிலையிலேயே நியூசிலாந்தின் இந்த வெற்றி அமைந்துள்ளது.இந்த வெற்றி இலக்கு 49ஓவரில் அடையப்பட்டது தான் இன்னும் சிறப்பம்சம். இதிலிருந்து ஒன்றை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது எதிர்வரும் காலங்களில் ஒரு நாள் போட்டியில் 400 ஓட்டங்களை பெற்றால் தான் வெற்றி பெறலாம் என்ற நிலை உருவாகினாலும் ஆச்சரியமில்லை. இதுவரை 325 ஓட்டங்களுக்கு மேல் "சேஸ்" செய்து வெற்றி பெற்ற அணிகளில் நியூசிலாநது முதல் நிலை வகிக்கின்ற போதும் இந்திய அணி இரண்டு வெற்றி பெற்றுள்ளது.

2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் தடைகள் லோட்சில் நடைபெற்ற இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் 49.3 ஓவரில் மூன்று விக்கெட்டுகளாலும் 2003 ஆம் ஆண்டு அகமதாபாத்தில மேற்கிந்தியதீவுடனான போட்டியில் 47.4 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களாலும் வெற்றி பெற்று சாதித்துக்காட்டியது. இதற்கு முன்னர் 2001 ஆம் ஆண்டு உலக சம்பியன் அவுஸ்திரேலியா 49.1 ஓவரில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 330 ஓட்டங் களை "சேஸ்" செய்து மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இப்படியாக பந்து வீச்சாளர்களை திணறடிக்கும் வகையில் ஓட்டங்களை குவிக்கும் துடுப்பாட்ட வீரர்களின் திறமையான ஆட்டம் தொடரும் நிலையில் எதிர்காலத்தில் ஒருநாள் போட்டி துருமபுச்சீட்டாகவே இருக்கப் போகின்றது.

கிருஷ்ணா

# பணம் புரளும் கால்பந்து

**கால்பந்து** என்றாலே சட்டென்று ஞாபகத்துக்கு வருவது ஐரோப்பா. அதிலும் ஞாபகத்துக்கு வரும் வீரர் டேவிட் பெக்காம். இங்கிலாந்து கால்பந்து அணித்தலைவரான இவருக்கு உலககெங்கிலும் ஏகப்பட்ட ரசிகர்கள் இருக்கிறார்கள்.

காரணம் இவரது அசாத்திய திறமையும் அழகான தோற்றமும் தான். அடிக்கடி சிகைஅலங்காரத்தை மாற்றிக்கொண்டு அசத்துவார். நீளமாக முடிவளர்த்து பெண்களைப் போல் சடைபின்னி பல அழகை உருவாக்குவதில் கில்லாடி. இவர் மொட்டை போட்டாலும் அதுவும் ஒரு தனி அழகாகத்தான் இருக்கும்.

இதனால் விளம்பர நிறுவனங்கள் இவரிடம் கோடிக்கணக்கில் கொட்டுகின்றன. இது ஒரு புறம் என்றால் மற்றொரு புறம் கால்பந்து கழகங்கள் தங்கள் கழகத்தில் பெக்காமை விளையாட வைக்க எவ்வளவு பணம் கொடுக்கவும் தயாராக இருக்கின்றன.

தற்போது பெக்காம் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். சரி இதெல்லாம் தெரிந்த விடயம் தானே என்கிறீர்களா? இதோ அவரைப் பற்றி ஒரு புதுத்தகவல்.

முன்னணி வாரப்பத்திரிகை ஒன்று அடுத்த ஆண்டில் அதிகம் சம்பாதிக்கப்போகும் நூறு இங்கிலாந்து பிரபலங்கள் கொண்ட பட்டியலை அறிவித்துள்ளது. இதில் விளையாட்டு வீரர்கள் வரிசையில் முதலிடத்தை பெற்றுள்ளார் பெக்காம். 2006 இல் மட்டும் இவர் 1200 கோடி ரூபாய் சம்பாதிப்பார் என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.



ரியல் மட்ரிட் அணியில் விளையாட பெக்காமின் சம்பளம் சுமார் 184 இலட்சம் ஒரு வாரத்திற்கு ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தவிர அவர் கையில் ஏகப்பட்ட விளம்பரங்கள் இருக்கின்றனவாம். இதில் வெறும் ஒரு நிமிடம் இண்டு நிமிடம் தலையைக் காட்டி னாலேயே போதும் இந்த ஆண்டில் அவர் 1200 கோடி ரூபா சம்பாதித்து விடுவாராம்.

இது இவ்வாறிருக்க இரண்டாவது இடத்தில் இருப்பவர் ஆர்சனல் அணியின் டென்னிஸ் பெக்காம் இவர் 600 கோடி ரூபா சம்பாதிப்பாராம். அடுத்ததாக இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் மைக்கல் ஓவன் 500 கோடி சம்பாதிக்க இருக்கிறார்.

நியூசேரில் கிளப் அணிக்காக விளையாடிவரும் இவருக்கு வாரம் சம்பளம் எவ்வளவு தெரியுமா? 162 இலட்சம் ரூபா.

இதெல்லாம் விளையாட்டு வீரர்கள் பட்டியலில் தான். ஒட்டுமொத்தமாக யார் முதலிடத்தில் இருக்கிறார் தெரியுமா? செல்சியா கால்பந்து கிளப்பின் சொந்தக்காரர் ரொமன் ஆப்ரமோவிச் என்பவர். இவர் பெறப்போகும் தொகையைக் கேட்டாலே ஆச்சரியமாக இருக்கும். அது எவ்வளவு தெரியுமா? ரூபா 160 ஆயிரம் கோடி.

இ.சியான்

# குடி குடியைக் கெடுக்கும்

**பொதுவாக** விளையாட்டுக்கள் மனிதனின் உடல் உள விருத்திகளை அதிகரிப்பதுடன் ஒற்றுமைக்கும் துணை புரிகின்றன. இது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் விடயமாகும்.

ஆயினும் நவீன உலகில் நாடுகளும் வீரர்களும் கடும் போட்டி மனப்பான்மை கொண்டிருப்பதால் தமது திறமையை வெளிப்படுத்த பல வழிகளைக் கையாளுகின்றனர்.

இவற்றுள் சில அங்கீகரிக்கப் பட்டவையும் சில தடை செய்யப் பட்டவையாகவும் உள்ளன. அந்த வகையில் சில வீரர்கள் போட்டிகளில் பங்கேற்கும் உடல்வலுவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பல ஊக்க மருந்துகளைப் பாவனை செய்து வருகின்றனர்.



எனினும் இதனை பரிசோதித்து அறிவதற்கும் சர்வதேச அமைப்புக்கள் உள்ளன.

உண்மையில் வீரர் ஒருவர் தனது உடலுக்கு வலுச்சேர்க்க சில போசனைப் பதார்த்தங்களை உட்கொள்வது அவசியமே எனினும் தடை செய்யப்பட்ட போசனை அல்லது ஊக்கமருந்து பாவித்தல் எப்போதும் தடையே.

ஒரு வீரர் ஒரு துறையில் பல வெற்றிகளை பெற்று சர்வதேச ரீதியில் புகழ்பெற்றவராக இருக்கலாம். பல பதக்கங்களையும் பெற்றிருக்கலாம். ஆயினும் அவர் மேற்படி தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை பாவித்தார் என கண்டறியும் போது அவரது பெருமை ஒரு நொடியில் அழிந்து விடுகின்றது.

அதே வழியில் சென்ற ஒரு பிரபல வீரரும் பிரிட்டனைச் சேர்ந்த வருமான குறுந் தூர ஓட்டவீரரான வெயின் சாம்பர்ஸ். தனது தவறை தற்போது உணர்ந்து பெரிதும் கவலைப்படுகிறார். இந்தக் குற்றத்துக்காக இரண்டு வருடம் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டு திரும்பி வந்திருக்கும் அவர் தான் இரண்டு வருடங்களாக சாக்கடையில் காலம் கழித்ததாக தெரிவித்துள்ளார். இதிலிருந்து அதன் தாக்கத்தை அவர் புரிந்துள்ளதுடன் உலகிற்கும் புரிய வைத்துள்ளார்.

தற்போது அவருக்கு போட்டிகளில் பங்கேற்கும் தடை தளர்த்தப்பட்டுள்ளது. அவர் சனவரியில் நடைபெறும் போட்டி ஒன்றில் பங்கேற்பார். தற்போது அவர் மனதளவில் மிகவும் உறுதியாகிவிட்டார். அதற்கேற்ப தனது உடல்தகுதியும் இடமளிக்க வேண்டும் என அவர் தெரிவிக்கிறார்.

வடிவேல்

## மல்வத்த பீடாதிபதியின் வேண்டுகோள்

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பினை வழங்கவேண்டும்.

தேர்தலில் சனாதிபதியை ஆதரித்த 28 அரசியல் கட்சிகளும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவினை வழங்கவேண்டும். என மல்வத்த பீடாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவதானத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும், சமாதானப் பாதையினை முன்னெடுத்துச் செல்கின்றார்.

இந்த நிலையில் அவரைத் தனிமைப்படுத்தாமல் அவர் செல்கின்ற பாதையினை சக்திப்படுத்துவதற்கு சகலரும் ஒன்றிணை வேண்டும். எனவும் மல்வத்தை பீடாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

## கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்கான கி ப்பொதுக் கூட்டம்-2005

0.12.2005இல் நடைபெற இருந்த நீராவிப்பிட்டி கிளைக்குழுத தேர்தல் நிறைவெண் இன்மையால் 2005.12.18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் அளித்து கிளைப்பொதுக் கூட்டத்தை நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

**நடைபெறும் இடம் :-** நீராவிப்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலயம்

**நேரம்:-** காலை -9.00 மணி

அ.மரியாம்பிள்ளை,
தேர்தல் உத்தியோகத்தர்
கரைதுறைப்பற்று ப. நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி.13554)

## ஆறாவது மாத நினைவஞ்சலி



மலர்வு 14 - 10 - 1963

உதிர்வு 19 - 06 - 2005

அமரர்

### நல்லதம்பி-தவராசா (இராசு) அவர்கள்

திதி:- துவாதசி பூர்பக்க திதியும் விசாக நட்சத்திரம்

" ஆறுதிங்கள் கடந்தாலும் ஆறாதுன் நினைவுகள்
தாறுமாறாய் வெட்டிச் சரித்திட்ட பாதகரின்
வீறடங்கி விட்டதுவோ வேகுகின்றோம் நாமிங்கே
மாறாதுன் நினைவு ஆறுமாதமான பின்னும்"
எமது பாச மிகு தெய்வமே! அன்புக்குலவிளக்கே!
ஆன்மசாந்திக்காய் ஆராதிக்கின்றோம்.

ஆறுமாத நிறைவில் இடம் பெறும் சமயக் கிரியைகள் 12.12.2005 திங்களிரவு நடைபெற்று 13.12.2005 செவ்வாய் மதியம் மதியபோசனமும் இடம் பெறும்.
உற்றார்,உறவினர்,நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு

மனைவி, பிள்ளைகள், தந்தை, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்

(சி.13553)

## தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

# அறிவித்தல்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 01.10.2003 – 31.03.2004 ஆம் நாள் வரையான காலப் பகுதியிலும் (01 வருட கால அடகுக்கடன் சேவை) , 01.07.2004 – 31.12.2004 ஆம் நாள் வரையான காலப்பகுதியிலும் (06 மாத கால அடகுக்கடன் சேவை) அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச் செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு தங்கப் பொருட்களை தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத்தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 26.12.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு தங்கப் பொருட்களை மீட்டுக் கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-13446)

# 2006 ஆம் ஆண்டு தொடங்கவுள்ள புதிய பேருந்துப்பணிக்கான வழித்தட அறிவித்தல்

கீழ்வரும் புதிய வழித்தடங்களுக்கு பேருந்துக்கான வழி ஒப்புதல் பெற விரும்புவோர் 31.12.2005 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

01 ஒதியமலை- நெடுங்கேணி
02 வெடிவைத்த கல்லு - நெடுங்கேணி
03 சுண்டிக்குளம் -விசுவமடு
04 பாலமோட்டை- நவ்வி, புளியங்குளம்
05 பாலம்பிட்டி,மடு - உயிலங்குளம்
06 முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு
07 மாத்தளன் -புதுக்குடியிருப்பு

**பேருந்துக்கு இருக்கவேண்டிய முக்கிய தகுதிகள்:-**

01 உற்பத்தி ஆண்டு 1995 இற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்
02 ஆகக் குறைந்தது 30 இருக்கைகளுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்
03 விண்ணப்பதாரியின் பெயரில் ஊர்தியின் தமிழீழ, சிறிலங்கா பதிவுகள் இருத்தல் வேண்டும்
04 மேலே கூறப்பட்ட மூன்று தகுதிகளையும் ஆவணங்கள் உறுதிப்படுத்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும்
05 ஊர்தி ஆய்வின்போது பயணிகள் போக்குவரவுக்கு ஏற்ற நிலையில் இருத்தல் வேண்டும்

விண்ணப்பம் னுப்ப வேண்டிய முகவரி:
முகாமையா ,
பயணிகள் ஊர்தி வழி அனுமதி வழங்கும் பணியகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.13551)

யாழ்ப்பாண பொது நூலகம் யாழ்ப்பாணம்

# பா.ஜ. தலைவர்களை தாக்குகிறார் உமாபாரதி

(பேகம்கஞ்ச்)

பா.ஜனதா தலைவர்களுக்கு 'கொள்கை' பரிசோதனை நடத்த வேண்டும் என்று மத்தியபிரதேச முன்னாள் முதல்வர் உமாபாரதி கூறியுள்ளார். மத்தியபிரதேச மாநில முதல்வர் பதவியில் இருந்து பாபுலால் கவுரை நீக்கிவிட்டு சிவராஜ்சிங் சவுகானை முதல்வராக நியமிக்க பாரதிய ஜனதா ஆட்சி மன்ற குழு சமீபத்தில் முடிவு செய்தது. இதை முன்னாள் முதல்வரும், பா. ஜனதா கட்சியின் அதிரடி பேச்சாளருமான உமாபாரதி கடுமையாக விமர்சித்தார். சிவராஜ்சிங் சவுகானை முதல்வராக தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட பா.உ.க்கள் கூட்டத்தில் இருந்து தனது ஆதரவாளர்களுடன் வெளிநடப்பு செய்தார். வாஜ்பாய், அத்வானி உட்பட மூத்த தலைவர்களை கடுமையான சொற்களால் விமர்சித்தார். அதனால் உமாபாரதி, பா. ஜனதாவில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.க. ஆட்சி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் பசுவதை தடைச்சட்டம்

## -பா. ஜ. க. தலைவர் அத்வானி-

(காந்திநகர்)

"பாரதிய ஜனதா ஆளும் மாநிலங்கள் அனைத்திலும் பசுவதை தடைச்சட்டம் கொண்டுவரப்படும்." என்று அக்கட்சியின் தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

குஜராத் தலைநகர் காந்தி நகரில் பா.ஜ.க சார்பில் பாரதிய கிஷான் சங்க பேரணி நடந்தது. இதில் அத்வானி பேசியதாவது:

பசுக்கள் கொலை செய்யப்படுவதை தடுக்கும் வகையில் பசுவதை தடைச் சட்டத்தை குஜராத் அரசு கொண்டு வந்தது. இதனை அமுல்படுத்துவதற்கு குஜராத் உயர் நீதிமன்று தடைவிதித்து விட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்று பசுவதை தடைச்சட்டம் சரியானதே எனத் தெரிவித்துள்ளது. பசுக்களின் இனப்பெருக்கத்திற்கு இச்சட்டம் உதவியாக இருக்கும். இச்சட்டம் பால் தரும் பசுக்களுக்கு மட்டும் கொண்டு வரப்படவில்லை. மற்ற கால்நடைகளின் நலனையும் கருத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. குஜராத்தை பின்பற்றி பா.ஜ. க ஆளும் அனைத்து மாநிலங்களிலும் பசுவதை தடைச்சட்டம் கொண்டு வரப்படும் என்று அத்வானி கூறியுள்ளார்.



# தமிழீழ நிர்வாகசேவை வேலை வங்கி ஆரம்பித்தல்

இலங்கை அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட முறையில் தமிழ்மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப அரச நியமனங்களில் உள்வாங்காமலும் திறமைக்கேற்ப பதவி உயர்வுகள் வழங்காமலும் நீண்ட காலத்திட்டமாக நடைமுறைப்படுத்தி வந்தது. இதனை தமிழ் அரசியல்வாதிகளால் பாராளுமன்றத்தில் கேட்க முடிந்ததே தவிர சீர்செய்ய முடியவில்லை. அரசின் இத்திட்டத்திற்கு யுத்தச் சூழ்நிலை மேலும் உதவியாக அமைந்துள்ளதால் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பதவி வெற்றிடங்கள் அதிகளவில் விகிதாசாரத்திற்கு ஏற்ப நிரப்பப்படவில்லை. இந்த விடயத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பதவி வெற்றிடங்களுக்கு அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யும் போது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேச விண்ணப்பதாரிகள் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அதிக சம்பளம் கொடுத்து கொழும்பு போன்ற நகர்ப்பகுதிகளிலிருந்து பதவியினரைச் சேர்க்கின்றனர். எமது பகுதிகளில் தகுதியானோர் இருந்தும் உள்வாங்கப்படாமைக்குரிய காரணங்களில் ஒன்று தகுதியானோர் தமக்கு தெரியாதென்பதும். அத்தோடு குறுகிய கால விளம்பரப்படுத்தலில் ஆட்சேர்க்கும் நடைமுறையால் இவற்றை அறியமுடியாமலிருப்பதும். இவற்றையெல்லாம் பரிசீலித்த பின்னர் இராணுவ ஆக்கிரமிப்பு தவிர்ந்த எமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள இளைஞர்/யுவதிகளில் அந்தந்த தகுதியானவர்களுக்கு அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உதவியாக தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகத்தால் வேலை வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழேயுள்ள மாதிரிப்படிவம் மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை பணிமனையில் பெறப்பட்டு பூரணப்படுத்திய விண்ணப்பத்தை திரும்பவும் மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பணிமனையில் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியிட்டு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

(குறிப்பு:- படிவக்கட்டணம் ரூபா 5/= ஆகும்)

வேலை வங்கி,
தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
155ஆம்கட்டை,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

## வேலை வங்கி விண்ணப்பம்

5/=

முழுப்பெயர் :- ..............................

முகவரி (நிரந்தரம்) :- ..............................

தற்காலிகம் (வசிக்கும் காலம்) :- ..............................

பிறந்த திகதி :- ..............................

பால் :- ........../........../.......... வயது ..............................

மாவட்டம் :- ..............................

பிரதேச செயலர் பிரிவு :- ..............................

கிராம அலுவலர் பிரிவும்/இலக்கமும் :- ..............................

கல்வித்தகைமை :- ..............................

இறுதியாக கல்விகற்ற வகுப்பும் வருடமும் :- ..............................

..............................

க.பொ.த. (சா/த) வருடம் ..............................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

வருடம் .............. க.பொ.த. (உ/த)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

பொது அறிவு ..............................

பட்டதாரியாயின் கற்கை நெறி :- ..............................

பாடங்கள் :- ..............................

ஏனைய தகைமைகள் :- ..............................

எதிர்பார்க்கும் தொழில் :- ..............................

மாவீரர்/போராளி/ ஆதரவாளர் குடும்பமாயின் விபரம் :-

..............................

..............................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

..............................

திகதி

.............................. விண்ணப்பதாரர்

ஒப்பம்

விண்ணப்பதாரர் திரு/திருமதி/செல்வி .............................. எனது பிரிவைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

..............................

திகதி

.............................. கிராம அலுவலர் ஒப்பம் றபர் முத்திரை

### அலுவலகப்பாவனைக்கு

(சி.13550)



புதுடில்லியில் நடந்த கண்காட்சியில் ஒரிசாவைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் சுஷில் குமார் தனது அழகிய சிற்பத்துடன் காணப்படுகின்றார்.

# நடைபேசி கமராவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(புதுடில்லி)

நடைபேசிகளில் உள்ள கமரா மூலம் பெண்களை படம் பிடித்து தவறான வழிகளில் பயன்படுத்துவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. கமரா நடைபேசிகளால் அதிகம் பாதிப்புக்குள்ளாவது கல்லூரி மாணவிகள் தான். எனவே பல கல்லூரிகள் நடைபேசிகள் பயன் படுத்தத் தடைவிதித்துள்ளன..

இதற்கிடையே இந்த பிரச்சினையை தெலுங்குதேசம் பாராளுமன்றத்தில் எழுப்பியுள்ளது. அந்த கட்சி பா.உ. வீங்கசீதா மேல்சபையில் இது தொடர்பாக ஒரு சட்டமுன்வரைவை கொண்டு வந்துள்ளனர்.

'அதில் அவர் நடைபேசி கமராவால் சமுதாய சீர்கேடுகள் அதிகரித்து வருகிறது. இதை ஒழுங்குபடுத்த வேண்டிய அத்தியவசிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார். நடைபேசி கமராக்களை பொது இடங்களில் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும் என்று அவர் சபையில் வலியுறுத்தி பேசினார்.

நடைபேசி கமராக்களால் பெண்களை படம் பிடிப்பதால் அவர்கள் நெருக்கடிக்குள்ளாகிறார்கள். இது கையில் வெடிகுண்டை வைத்து இருப்பதற்கு சமம். எனவே அரசு உடனே தலையிட வேண்டும் என்றார்.

தெலுங்குதேசம் கட்சி பா.உ. வீங்கசீதாவின் யோசனை ஏற்கப்பட்டால் நடைபேசிகமராக்களை பொது இடங்களில் உபயோகிக்க தடை வரும். மீறி பயன்படுத்தினால் 50 ஆயிரம் ரூபா வரை குற்றப்பணம் அறவிடப்படலாம் எனத் தெரிகிறது.



# சிறைக் கைதிகளின் மேல்படிப்பு மோகம் நல்ல வேலை பெற வேண்டும் என ஆர்வம்

இந்தியாவில் சிறைக் கைதிகளின் மேல் படிப்பு மோகம் அதிகரித்துள்ளது. இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகம் சார்பில் வரும் 28ஆம் திகதி நடக்கும் அரை ஆண்டு தேர்வில் 250 கைதிகள் பங்கேற்க வுள்ளனர்.

நாடு முழுவதும் உள்ளபல சிறைகளில் இந்திராகாந்தி திறந்த வெளி பல்கலைக்கழகம் கல்வி மையங்களை திறந்துள்ளது. இதில் சேர்ந்து படிக்கும் வழக்கம் கைதிகளிடம் அதிகரித்து வருகிறது. இந்த முயற்சியை 1994 ஆம்ஆண்டு இப் பல்கலைக்கழகம் தொடக்கியது. பத்துஆண்டுகளில் ஆயிரம் கைதிகள் பட்டதாரிகளா கியுள்ளனர். இந்த மையத்தில் சேரும் கைதிகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப படுகின்றன. சிறைக்குள்ளேயே வகுப்புக்களும் நடத்தப்படு கின்றன. செய்முறை தேர்வுகள் சிறைக்கு வெளியே நடத்தப்படு கின்றன. இதில் பங்கேற்கும் கைதி கள் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இது குறித்து பல்கலைக்கழக பதிவாளர் மெகாபத்ரா கூறுகையில் ஜம்மு, சிறிநகர், ஷில்லாங், பெங்களூர், சபர்மதி, டில்லி, அய்ஸ்வால், திருச்சி, பாட்டியாலா, வேலூர் ஆகிய இடங்களிலுள்ள சிறைகளில் இது போன்ற கல்வி மையங்கள் செயற் பட்டு வருகின்றன. வரும் 28ஆம் திகதி அரைஆண்டுத் தேர்வு தொடங்குகிறது. இதில் 11 சிறைகளில் உள்ள 250 கைதிகள் பங்கேற்கவுள்ளனர்", என்றார்.

டில்லி டெஸ்ட்போட்டி

# இர்பான்புதான் சிறப்பான அடித்தளம் இந்தியா 297 ஓட்டம் முன்னிலையில்



இந்திய சிறிலங்கா அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டி விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று 198 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தொடர்ந்து ஆடிய சிறிலங்கா 230 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்தது.

இதன் மூலம் 60 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களைப்பெற்று 297 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.




துடுப்பாட்டத்தில் சகலதுறைவீரர் இர்பான் பதான் ஆரம்பவீரராக களமிறங்கி அபாரமாக ஆடி 93 ஓட்டங்களைச் சேர்த்து இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்ததுடன் ஏழு ஓட் டங்களால் கன்னிச் சதத்தைத் தவறவிட்டார்.

அவர் 93 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். ராவிட் 53 ஓட்டங்களை பெற்றார். ஆட்டமிழக்காது கங்குலி, யுவராஜ்சிங் ஆகியோர் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் வாஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், பண்டார, பெர்னாண்டோ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முதல் இனிங்சில் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முரளி இரண்டாவது இனிங்சில் தோற்றுப் போனார்.



முன்னதாக சிறிலங்கா துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து 88, ஜெயவர்த்தன 60, முபாரக் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கும்ளே ஆறு விக்கெட்டுக் களையும், பதான் மூன்று விக்கெட்டுக் களையும், ஹர்பஜன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதேவேளை ராகுல்ராவிட் 50 ஓட் டங்களைப் பெற்றபோது டெஸ்ட்போட்டியில் 8000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார்.

போட்டியின் நான்காம் நாள் இன்று.



கால் பந்தாட்டத்தில் ஆயுட்கால சாதனை யாளர் விருதை பிரேசிலின் பீலே பெற் றுக்கொண்டார்.



18 ஆண்டுகளுக்குப் பின்னர் அவுஸ் திரேலியாவிடம் இருந்து ஆஷஸ் கிண் ணத்தை வென்றதால் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் அணிக்குரிய பி.பி.சியின் விருது இங்கிலாந்திற்கு வழங்கப்பட்டது.

## தமது அணியின் முகாமையாளருக்காக 2006 உலகக் கிண்ணத்தை கைப்பற்றவேண்டும்

### - இங்கிலாந்து கால்பந்துவீரர் றூனி



இங்கிலாந்து உதை பந்தாட்ட வீரர் வெய்ன் றூனி தமது அணியின் முகாமை யாளரான ஸ்வன் கோற ஹாக்காக வரும் உலகக் கிண்ணத்தை கைப்பற்ற வேண்டும் எனத் தெரிவித்துள் ளார்.

தனது அணியின் சிறந்த வழிகாட்டியாகவும் நிர்வாகியாகவும் நம்பிக்கைக்குரியவராகவும் கோறன் விளங்குவதாகவும் றூனி தெரிவித்துள்ளார். அத்துடன் கோறன் 2002ஆம் ஆண்டு உலகக் கிண்ணப்போட்டியிலும் 2004ஆம் ஆண்டு யூரோ கிண்ணப் போட்டியிலும் அணியை காலிறுதிவரை இட்டுச்சென்றதாகவும் சிறந்த முகாமையாளராகவும் விளங்கியதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

அணித்தலைவர் பெக்காமுக்கு அடுத்தபடியாகக் கருதப்படும் றூனி அண்மையில் அயர்லாந்துடனான தகுதி காண் போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்ததால் பெக்காமை தேவை யில்லாமல் குறை கூறினார். எனினும் அது நீரில் கரைந்துபோன விடயம் என்றும் பெக்காம் தனது ஆருயிர் நண்பன் எனவும் தெரிவித்துள்ளார்.இங்கிலாந்து வரும் உலகக்கிண்ணத்துக்கு குழுநிலைப்போட்டியில் சுவீடன் பராகுவே, ட்ரினிடாட் அன்டு பாகோ அணிகளுடன் மோதும்.

## வசீம் அக்ரமின் கூற்றுக்கு ஈசான் மணி கடும் கண்டனம்



சர்வதேசக் கிரிக்கெட் சபை வெள்ளையர் களின் கோட்டை என்று முன்னாள் பாகிஸ்தான் அணியின் தலை வர் வசீம் அக்ரம் கூறிய கருத்தை சபைத்தலைவர் ஈசான் மணி வன்மையாகக்கண்டித்துள்ளார். ஒரு பிரபல கிரிக்கெட் வீரர் இவ்வாறான கூற்றை வெளியிட் டிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையளிப்பதாகவும் அக்ரமின் கூற்று சர்வதேச கிரிக்கெட் சபையில் அங்கம் வகிக்கும் அனைவரையும் பாதிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சர்வதேச கிரிக்கெட் சபையில் சுனில் கவாஸ்கர், உட்பட நான்கு ஆசிய பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதுடன் முன்னாள் தென்னாபிரிக்க உதவித்தலைவர் டேவிட் றிச சார்ட்சன் பொதுமுகாமையாளராகவும், சிறிலங்காவின் றொசான் மகாநாம, றஞ்சன் மடுகல்ல ஆகியோர் போட்டி நடுவர்களாகவும் அங்கம் வகிப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வசீம் அக்ரமின் கூற்று அவரது ஆய்வு; புரிந்துணர்வு நடு நிலைமை என்பவற்றை தகர்த்துவிட்டது என்றும் மணி தெரிவித்துள்ளார்.

## 24 வருடங்களிற்குப் பின்னர் பி.பி.சி. விருது பெற்ற இங்கிலாந்து வீரர்



24 வருடங்களின் பின்னர் பி.பி.சி வழங்கும் ஆண்டுக்கான சிறந்த வீர ருக்கான விருதைப் பெறும் முதல் இங்கிலாந்து கிரிக்கெட் ஆட்டக்காரர் என்ற பெருமையை சகல துறைவீரர் அன்ரு பிளிண்டொப் பெற்றுள்ளார்.

1987 இற்கு பின்னர் அவுஸ்திரே லியாவிடமிருந்த ஆஷஸ் கிண் ணத்தை வெற்றி கொண்டபோது அவரது பணிமேலோங்கியிருந்தது.

இதற்காக நடத்தப்பட்ட வாக் கெடுப்பில் படகோட்ட வீரர் மக் ஆர்தர் லிவர்பூல் உதைப் பந்தாட்ட வீரர்' ஸ்ரீபன் கரத் ஆகியோரை வென்று முதலா மிடத்தைப்பெற்றார்.

இந்த விருது1981ஆம் ஆண்டு இயன் பொத்தமுக்கு வழங்கப்பட்டது.

இயன் பொத்தமிடமிருந்து இவ்விருது தனக்குக்கிடைப்பது மிக்க மகிழ்ச்சி அளிப்பதாக பிளிண்டொப் தெரிவித்துள்ளதுடன், ஆஷஸ் தொடரில் பங்கேற்றது ஒரு வகையில் விசேட அம்சமாவதுடன் வோகனின் அணித் தலைமையில் அணியின் முற்று முழுதான முயற்சியும் வெற்றிக்குக்காரணம் என்றார்.இதன்போது சிறந்த அணிக்குரிய விருது இங்கிலாந்து அணிக்கு வழங்கப்பட்டது. ஆஷஸ் தொடரில் பிளிண்டொப் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் திறமை காட்டி யமை குறிப்பிடத்தக்கது.

## கடின உழைப்பு, பயிற்சியுமே டெண்டுல்கரின் வெற்றியின் ரகசியம்

### முன்னாள் வீரர் சிவராமகிருஷ்ணன்



கடின உழைப்பும், பயிற்சியும் தான் டெண்டுல்கரின் வெற்றிக்கு காரணமென இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சிவராமகிருஷ்ணன் புகழாரம் சூட்டியுள்ளார்.

டெண்டுல்கரின் திறமையால் மட்டுமே அவருக்கு வெற்றி கிடைத்து விடவில்லை. தனது துறை பற்றிய தொடர் சிந்தனை, மனதை ஒருமுகப்படுத்தி ஆடுவது போன்ற தன்மைகளையும் அவர் கொண்டி ருக்கிறார்.

சர்வதேச போட்டிகளில் களமிறங்குவதற்கு முன்பு அவர் தன்னை தயார்படுத்திக்கொள்ளும் பாணியே தனி. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தைச் சொல்லாம்.

12 ஆண்டு இடைவெளிக்கு பின் 1998-இல் மார்க்டெய்லர் தலைமையில் அவுஸ்திரேலிய அணி இந்தியா வந்தது. அப்போது டெண்டுல்கர் எனது உதவியை நாடினார்.எதற்கு எனக்கேட்டதற்கு சச்சின் இப்படிக் கூறினார்.

ஷேன்வோர்னே சிறந்த லெக்ஸ்பின்னர். நீங்களும் லெக்ஸ்பின்னர், பயிற்சியின் போது உங்கள் பந்துவீச்சை சமாளித்து விட்டால் போட்டியின் போது ஷேன்வோர்னின் பந்தை நொருக்கி விடலாம் என சச்சின் கூறினார்.

காலை, மாலை என இரு வேளையும் தலா 45 நிமிடம் தொடர் பயிற்சி. விளைவு அவுஸ்திரேலியா வுக்கு எதிரான போட்டியில் 155 ஓட்டம் எடுத்து இந்தி யாவை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

சச்சின் எப்போதும் மனதளவில் வலிமை உள்ளவர். இப்பழக்கம் இளமை முதலே அவரிடம் இருந்து வந்துள்ளது. கிரிக்கெட் உலகின் ஜாம்பவான் பிராட்மனுக்கு அடுத்தபடியாக சச்சின் இருக்கலாம். நான் பார்த்தவரை சச்சின் தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் எனக் கூறியுள்ளார் அவர்.




## அக்தர் அக்மல் அபாரம் பாக். கிற்கு 7விக்கெட் வெற்றி



இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக் கிடையில் லாகூரில் நேற்று நடைபெற்ற இரண் டாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற் றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 48.4 ஓவரில் அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப்பெற்றது. துடுப் பாட்டத்தில் பிளிக்நெட் 56, சோலங்கி39, பிறியர் 32ஓட்டங்களைப் பெற்றனர்.

முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததுடன் ஸ்ரோஸ், பிளின்டொப் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் அக்தர் ஐந்து விக்கெட்டுக்களையும், நவீட் உல்ஹசன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய பாகிஸ் தான் அக்மலின் அபாரசதத்தின் உதவியுடன் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 44 ஓவர் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது.

அக்மல் 102 ஓட்டத்தையும், சல்மான்பட் 43 ஓட்டங்களையும், இன்சமாம் ஆட்டமிழக் காது 31ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச் சில் கொலிங்வூட், பிளின்டொப், கார்மிஷன் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.இதன்மூலம் ஐந்துபோட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணிகளும் ஒன்றுக்கு ஒன்று என்றநிலையில் சமநிலை பெற்றுள்ளது.



## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 13.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஏற்கத்தக்கதாகாது

சிறிலங்கா அரசின் கவனம் இன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமைப்பொறுப்பில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதில் திரும்பியுள்ளது. ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியின் தகவலின்படி நோர்வே தவிர்ந்த ஸ்கன்டிநேவியநாடு ஒன்றிடம் தலைமைத்துவம் செல்வதை சிறிலங்கா அரசு விரும்புவதாகத் தெரிகின்றது.

ஆனால் உண்மையில் சிறிலங்கா அரசு அதனைகூடப் முழு மனத்துடன் விரும்பமாட்டாது என்பது எமக்குத் தெரியும். கண்காணிப்பாளர் விடயத்தில் நோர்வே தவிர ஏனைய ஸ்கன்டிநேவியநாடுகள் எனின் நோர்வேயிடம் இருந்து பெரும் ஆட்சேபம் எழாது என்பது மட்டுமல்ல வெளிப்பார்வையின் அடிப்படையில் அந்நாடுகளும் நோர்வே போன்ற தோற்றப்பாடு கொண்டவையாக வெளியுலகில் அறியப்படுகின்றன. இதுவே இந்நாடுகளை சிறிலங்கா அரசு தேர்ந்தெடுக்கக் காரணமாகும்.

இத்தனைக்கும் நோர்வேயின் கண்காணிப்புப் பணியில் சிறிலங்கா கண்டுள்ள குறைதான் என்ன?. நோர்வே கண்காணிப்புப் பணியில் புலிகளுக்குச் சார்பாக எப்பொழுது நடந்து கொண்டது? நோர்வேயின் கண்காணிப்புக்குழுத்தலைவர் உடன்பாட்டு விதிகளுக்கு மாறாக– அதாவது சிறிலங்கா அரசிற்கு எதிராக நடந்து கொண்ட சம்பவங்களைப் பட்டியலில் இட்டு வெளிப்படுத்தி தனது கோரிக்கையை இதுவரை வலுப்படுத்தாமல் இருப்பது ஏன்?

நோர்வே கண்காணிப்புக்குழுவின் கடந்தகால சில அறிவிப்புகள் முடிவுகள் விடுதலைப்புலிகளுக்கும் கடும் விசனத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியதுண்டுதான். தமிழ் மக்கள் சினப்பட்டதும் உண்டுதான். இதற்கான ஆட்சேபங்களும் தெரிவிக்கப்பட்டதுண்டு. ஆனால் கண்காணிப்புக்குழுவை வெளியேற்றுமாறு அவர்கள் கோரவில்லை. ஏனெனில் யுத்தநிறுத்தஉடன்பாட்டின் பிரகாரம் கண்காணிப்புக்குழு சில எல்லைகளுக்குள்ளேயே நடந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ கண்காணிப்புக்குழுவின் செயற்பாடு தமக்குச் சாதகமானதாக இல்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டதாகவுள்ளது. குறிப்பாக அரச படைகள் புரியும் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து கண்காணிப்புக்குழு மௌனம் காக்க வேண்டும் எனக் கருதும் அரசு புலிகள் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களைக் கண்காணிப்புக்குழு ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும் என எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. இதற்கு ஏற்ப கண்காணிப்புக்குழு செயற்படாத பட்சத்தில் கண்காணிப்புக்குழுமீது அரசாங்கம் தனது சீற்றத்தை வெளிப்படுத்துவதோடு கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளையும் விமர்சனம் செய்ய விளைகின்றது.

இத்தனைக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டில் பல்வேறு சரத்துக்கள் அரசத்தரப்பினரால் நிறைவு செய்யப்படாதுள்ளது. குறிப்பாக ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைதல், வெளியேற்றுதல்; மக்களைச் சொந்த இடங்களில் குடியேற அனுமதித்தல்; மக்கள் சுதந்திரமாக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதித்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசு யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு உட்பட்டு நடந்ததாக இல்லை.

இவை ஒருபுறமிருக்க நோர்வேயைக் கண்காணிப்பாளர் தலைமைப்பதவியில் இருந்து வெளியேற்றுதல் என்பது ஒருதலைப்பட்சமாக சிறிலங்கா அரசினால் எடுக்கப்படக்கூடிய முடிவல்ல. ஏனெனில் யுத்தநிறுத்த உடன்பாட்டின் பிரகாரமே கண்காணிப்புக்குழுவின் தலைமைத்துவம் நோர்வேக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகையினால் நோர்வேயை மாற்றுதல் என்பது யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றியமைத்தல் என்பதுடன் தொடர்புபட்டது. ஆகையினால் புலிகளின் சம்மதம் இன்றி யுத்தநிறுத்த உடன்பாட்டையோ நோர்வேயின் கண்காணிப்புக்குழுத் தலைமைத்துவத்தையோ மாற்றியமைத்தல் என்பது முடியாது.

இது ஒருபுறம் இருக்க–நோர்வேக்குப் பதிலாக ஒரு நாட்டைத் தேர்ந்தெடுத்தல் என்பதும் இலகுவானதொரு காரியமல்ல. அதாவது கண்காணிப்புக்குழுவின் தலைமைப்பதவியை ஏற்கும் நாடு நடுநிலைமையான செயற்பாட்டைக் கொண்ட – வெளிப்படுத்திய நாடாகவும் இருத்தல் அவசியமாகும். குறிப்பாக விடுதலைப்புலிகளையும் சிறிலங்கா அரசுடன் சமநிலையில் வைத்து கடந்தகால நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யாத நாடாகவும் சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகளை வழங்காத நாடாகவும், அதேவேளை விடுதலைப்புலிகள் மீது இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்காத நாடாகவும் இருத்தல் அவசியமானதாகும். இவ்வாறு இருக்கும் பட்சத்திலேயே அதனால் நடுநடுநிலமையுடன் கண்காணிப்புப் பணியைச் செய்தல் முடியும்.

ஆனால் தற்பொழுது சிறிலங்கா அரசு விரும்பும் நோர்வே தவிர்ந்த ஸ்கன்டிநேவிய நாடுகள் எவையும் இத்தகைய நிலையில் உள்ளனவா என்பது கேள்விக்குரியதே. தற்போதைய கண்காணிப்புக்குழுவில் நோர்வே சார்ந்த ஸ்கன்டிநேவிய நாட்டுப்பிரதிநிதிகள் இருக்கலாம். ஆனால் தலைமைப்பதவிக்கு ஏற்றவகையில் நடுநிலமைப் பாத்திரத்தை அவை வகித்ததாக இல்லை. குறிப்பாக சில நாடுகள் தனிப்பட்ட ரீதியிலும் பல நாடுகள் ஐரோப்பியயூனியன் என்ற ரீதியிலும் சிறிதளவிலாயினும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படுபவையாகவே உள்ளன.

இந்நிலையில் கண்காணிப்புக்குழுத்தலைவராக நோர்வே பிரதிநிதி தவிர்ந்த ஒருவரை நியமனம் செய்தல் என்பது சாத்தியப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது. அதாவது அரசாங்கம் தமக்குச் சார்பானதொரு அரசை யுத்தநிறுத்த கண்காணிப்புத் தலைமைப் பொறுப்பிற்கு நியமிப்பதற்கு புலிகளிடம் இருந்து ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்ப்பது மடமைத்தனமாகவே இருக்கும்.

# வடக்கில் யுத்தத்திற்குச் சென்று சமாதானத்தை கொண்டு வரவேண்டும்

**– ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமயவிற்கு ஐ.தே.க அழைப்பு**

யுத்தமொன்று ஏற்பட்டாலும் கௌரவமான சமாதானத்தைக் கொண்டு வருவதாக சனாதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது கூறிய ஜே.வி.பி யின் விமல் வீரவன்சவையும், ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரரையும் வடக்கில் யுத்தத்திற்குச் சென்று சமாதானத்தைக் கொண்டு வருமாறு அழைப்பு விடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் உத்தியோகப் பற்றற்ற வகையில் ஆரம்பமாகியிருப்பதாகவும், கடந்த சில தினங்களில் 17 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர், மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு வரும் கொள்கைகளை மீறி வருகின்றார் என்றும் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமயவில் எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோர் தேர்தல் மேடைகளில் நோர்வே வெள்ளைப் புலிகளை விரட்டியடிப்பதாகக் கூறினாலும் இன்று சனாதிபதி நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு நோர்வேயின் உதவியை நாடுகிறார்.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரத்தைப் பகிரும் நடவடிக்கைகளுக்காக இந்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர முயற்சித்த போதிலும் அந்தப் பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

# சில வாரங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவரவேண்டுமெனப் புலிகள் எதிர்பார்க்கக்கூடாது

**– மல்வத்த மகாநாயக்க தேரர் தெரிவிப்பு**

(கொழும்பு)

இரண்டு தசாப்த காலமாக நிலவும் இனப்பிரச்சினைக்குப் புதிய சனாதிபதி இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் தீர்வு காண வேண்டுமென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் எதிர்பார்க்க முடியாது என மல்வத்தை மகாநாயக்கதேரர் திப்பட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் மல்வத்தை மகாநாயக்கரை சந்தித்து ஆசீர்வாதம் பெறச் சென்றபோதே மகாநாயக்கர் இதனைத் தெரிவித்தார்.

தெற்கிலிருக்கும் தலைவர்களின் செயற்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அவர்கள் தாம் ஏமாற்றப்படுவதாக எண்ணுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என்று உலாவிய வதந்தி தவறான ஒன்று எனத் தெளிவாகியுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து இனத்தினருக்கும் மதத்தினருக்கும் சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சனாதிபதி அர்ப்பணிப்புடன் இருக்கிறார். அவரை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு உதவிய கட்சிகள் சமாதான நடவடிக்கைகளுக்கும் அவருக்கும் உதவ வேண்டும் என்றார்.

புதிய இராணுவத் தளபதி அஸ்கிரிய மகாநாயக்கரையும் சந்தித்தார். விடுதலைப் புலிகள் பல தடவைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி கொலைகளைச் செய்துள்ளனர்.

இந்த கொலைகளின் பின்னர் அவற்றைத் தாங்கள் செய்யவில்லை என்றும் அவற்றை மூன்றாம் தரப்பினரே செய்ததாகவும் கூறுகின்றனர். அப்படியொரு தரப்பு இருக்குமாயின் அதனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று அஸ்கிரிய மகாநாயக்க தேரர் கலகம சிறி அத்ததிஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

# கிழக்குத் தாக்குதல்கள் குறித்து பேச்சு நடத்த சனாதிபதிக்கு மு.கா அழைப்பு

கிழக்கில் நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் நிலைமை குறித்தும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் குறித்தும் விரைவில் பேச்சு நடத்தப்பட வேண்டியது அவசியம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிறிலங்கா சனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

கிழக்கில் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கிழக்கின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த ஏழாம் திகதி பாராளுமன்றத்தில் விசேட உரைநிகழ்த்துகையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் கட்சியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் அனுமதியின்றி இந்த நால்வரும் அரசாங்கத்தை ஆதரிக்கத் திட்டமிட்டிருப்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த எம்.எஸ். செல்லச்சாமி, வடிவேல் சுரேஸ், புத்திரசிகாமணி, ஜெகதீஸ்வரன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களையே கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் கட்சியின் கூட்டம் கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் தலைமையில் கூடியபோது நால்வருக்கும் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை அரசாங்கத்துடன் இணையவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சியின் தலைவர் தொலைபேசியினூடாக அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னர் அவர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க பொலிசார் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நீக்க கல்வி அமைச்சு முடிவு

(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் பரீட்சைகளை சிறிலங்கா கல்வியமைச்சு நீக்கிவிட முடிவு செய்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று கூறுகிறது.

அண்மைக்காலமாக இக்கணிப்பீட்டுப் பரீட்சை மீது ஆசிரியர்களும் மாணவர்களும் விமர்சனங்களைத் தெரிவித்து வந்த நிலையில் புதிதாகப் பதவியேற்ற கல்வியமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த இதனை நீக்கிவிடுவதாக அறிவித்துள்ளார்.

இந்தமுறை ஆசிரியர்களுக்கு வேலைப்பளுவை அதிகரிப்பதாகவும் இதற்காக ஆசிரியர் சங்கங்கள் பல கண்டனப் பேரணிகளை நடத்தியிருப்பதாகவும் இதனால் இதனை நீக்குவதற்கு பிரேம ஜயந்த இணங்கியிருப்பதாக கல்வியமைச்சின் செயலர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகவும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை கஷ்டப் பிரதேசப்படி என்பன தொடர்பாகவும் அமைச்சர் விரைவில் விளக்கமளிக்கவிருப்பதாக செயலர் தெரிவித்துள்ளதாகவும் அவ்ஊடகம் கூறுகிறது.

# கொழும்பின் பாதுகாப்புக்கு கமராக்கள் பொருத்த பொலிஸ்மா அதிபர் திட்டம்

(கொழும்பு)

கொழும்பிற்குள் உள்நுழையும் மற்றும் வெளியேறும் வாகனங்களையும், மக்களையும் அடையாளம் காண்பதற்காக கொழும்பிற்குள் நுழையும் இடங்களில் இருக்கும் சுற்று வட்டங்களில் கமராக்களைப் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைய 32 பிரதான சுற்றுவட்டங்களில் 32கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் இதற்கு என 200 மில்லியன் ரூபா அளவில் செலவாவதாகவும் கணக்கிடப் பட்டுள்ளது.

இதன் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகள்,பாதாள உலகக் குற்றச செயல்கள் மட்டுமன்றி போக்குவரத்து ஒழுங்கீன குற்றச்சாட்டுகளுக்கு இலக்காவோரையும் இனங்காணமுடியும். பல கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த கமரா பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாகவும் இந்தமுறை வரவு-செலவுத்திட்டத்தில் அதற்கென நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.இந்தக் கமராக்களில் பதிவுசெய்யப்படும் காட்சிகளை ஒரு இடத்திற்குக் கொண்டு வந்து அவற்றை 24 மணி நேரமும் கண்காணிப்பதற்காக தனியானதொருபொலிஸ் பிரிவு உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# கிளி. தொலைபேசி சேவை இன்று மாலைக்குள் சீராகும்

(அலுவலக செய்தியாளார்)

தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தை இடிமின்னல் தாக்கியதால் செயலிழந்திருந்த கிளிநொச்சிக்கான தொலைபேசிச்சேவை இன்று பிற்பகலுக்கு முன்னர் சீரடையும் எனத்தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: யாழ்.குடாநாட்டை -பனூஸ் புயற்காற்று கடந்து சென்றவேளை அடைமழை ஏற்பட்டது. இதன்போது ஏற்பட்ட இடிமின்னல் யாழில் அமைந்துள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் தாக்கியது. இதனால் கிளிநொச்சிக்கான தொலைபேசி இணைப்புக்கள் கடந்த சில நாட்களாகத் துண்டிக்கப்பட்டிருந்தன.

இதனால் பாவனையாளர்களுக்கு சிரமம் ஏற்பட்டது. இந்த நிலையில் கிளிநொச்சிக்கான தொலைபேசிச் சேவைகளை மீண்டும் விரைவாக சீர் செய்து வழங்குவதற்கு தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் பிரிவு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.பலபகுதிகளில் நேற்றுப்பிற்பகல்முதல் தொலைபேசி இணைப்புக்கள் இயங்குகின்றன. சில பகுதிகளில் இயங்கவில்லை. இதைவிடக் குறிப்பிட்ட இடங்களில் தொலைபேசிக் கேபிள்கள் அறுந்துள்ளன. இவற்றைச் சீர்செய்து இன்று மாலைக்குள் தொலைபேசி இணைப்புக்கள் அனைத்தும் வழமைக்குகொண்டுவரப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (லோ)

## யாழ்.இந்துக்

அடுத்து யாழ்.பிறவுண் வீதிமற்றும் சிவலிங்கப் புளியடிச் சந்தி மற்றும் அதனை அண்டிய பகுதிகளினூடாக பயணம் செய்வோர்பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டனர். (28)

## வவு..

காரணமாக சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் வவுனியா பொலிசார் மேலும் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை ஏழு மணியளவில் இடம்பெற்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. 21,10)

## வந்தாறு..

அந்த வழியாகச் சென்ற இராணுவ வாகனமொன்றை இலக்கு வைத்து இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டு கைக்குண்டும் வீசப் பட்டுள்ளதாக ஏறாவூர் சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

## வெளிநாட்டு..

என்றகொள்கையைக் கொண்டிருந்ததாகவும் அதனையே அமைச்சர் மங்களசமரவீர பின்பற்றுவதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

## பேசாலை..

இதே வேளை இச் சம்பவத்தின் போது காயமடைந்த பொலிசார் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. .(18)

## திருமலையில்..

(வயது 52) எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே மூதூர் பாலைநகரில் நடந்த மற்றுமொரு சம்பவத்தில் கத்திவெட்டுக் காயங்களுடன் சடலமொன்று நேற்று முன்தினமிரவு சிறிலங்காப் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

கொல்லப்பட்ட நபர் பிறிதொரு இடத்தில் கொல்லப்பட்டு அந்த இடத்தில் போடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையே வன்முறைகளைத் தூண்டும் குழுவினரின் பின்னணியில் இந்தக் கொலைகள் நடந்திருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.

## வவுனியா..

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் வீதியால் செல்லும் வாகனங்களும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது ஆட்டோச்சாரதி ஒருவர் உட்பட இரு இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜெகநாதன் பிரதீபன் (வயது-26) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று சாஸ்திரி கூழாங்குளம் பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் புளொட் அமைப்பினரின் உதவியுடன் வீடுவீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (10),(21)

## புளொட்..

மோட்டார் வண்டியில் சென்று கொண்டிருந்த போது இவர் வான் ஒன்றில் வந்தவர்களினால் கடத்தப் பட்டிருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். இவரைக் கடத்தி சென்றதாகக் கூறப்படும் அந்த வான் மதியம் வவுனியா கிடாச்சூரி என்ற இடத்தில் வைத்து இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த வாகனத்தில் பிரயாணம் செய்த வாகன உரிமையாளரான சுரேன் என்பவர் உட்பட மூன்று பேரையும் கைது செய்திருப்பதாகவும் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட இருப்பதாகவும் வவுனியா பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (21,10)

## திருநெல்வேலி..

வீதியில், ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினர் திடீரென்று வீதியால் சென்றுவந்த பொதுமக்களை குண்டாந்தடி, பொல்லுகள் கொண்டுதாக்கத் தொடங்கினர். இதனால் பல பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளதுடன் சிலர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளிலும், அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத் திடீர்த்தாக்குதல் சம்பவத்தில் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் மாணவரான நா.சஞ்சயன் (வயது-28), என்பவர் மிகமோசமாகப் பாதிப்படைந்துள்ளார். பாதிப்படைந்த மாணவன் தான் தாக்கப்பட்டிருப்பது ஒரு மனித உரிமை மீறும் செயலாகும் என்று இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (33,37)

## போருக்கு..

இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யுத்தத்தாலே சிதைந்து போன தேசமாக உருவாக்க முற்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு எந்த நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் நிமிர்ந்து நின்று சாதனைகளைப் படைப்போம் என்கின்ற உறுதியும், ஆற்றல்மிக்கதாக எமதுதேசம் வளர்ந்து வருகின்றதென்பதை வெளிப்படுத்தும் முகமாக எங்களுடைய மாணவர்கள் அனைத்துத்துறைகளிலும் விரைவாக வளர்ந்து வருவதைப் பார்த்து எமது தலைவர் அவர்கள் மகிழ்ச்சியடைவார். மாணவர்களின் வளர்ச்சியே தலைவரின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து எமது தேசத்தை மீட்டெடுக்கின்ற அதேநேரத்தில் எமது தேசத்தில் வளர்ந்து வரும் தலைமுறை அனைத்துத் துறைகளிலும் ஆற்றல் மிக்க, வலுவுள்ள சக்திமிகுந்த தலைமுறையாக வளர்ந்து வரவேண்டுமென்பது எங்களுடைய தலைவருடைய முக்கிய கவனமாகவும், ஈடுபாடாகவும் உள்ளது.

அந்த வகையில் தான் நாம் போராட்ட முன்னெடுப்புக்களுடன் அனைத்து கட்டமைப்புக்களையும் கட்டியெழுப்பி எமது தலைமுறையினரை ஆரோக்கியமான முறையில் வளர்க்கவேண்டும் என்ற நோக்கோடுதான் எங்களுடைய கல்விக்கழகம், மாணவரமைப்பு, நுண்கலைப்பிரிவு போன்ற பல்வேறுபட்ட கட்டமைப்புக்களை உருவாக்கி இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்தி அனைத்துத்துறைகளிலும் எமது கவனத்தைச் செலுத்தி வருகின்றோம்.

அண்மைக்காலமாக எமது மாணவர்கள், கல்வி, விளையாட்டு, கலைத்துறை என்பவற்றில் முன்னிலைவகித்து வருகிறார்கள்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் கலைத்துறையில் பல முதற்பரிசில்களை பெற்றதையிட்டு ஆச்சரியப் படுகின்றோம்.

ஏனெனில் யுத்தத்தால் மிக நீண்டகாலமாக கிளிநொச்சி மாவட்டம் பெரும் நெருக்கடிபட்டு, இடம்பெயர்ந்து பாடசாலைகள் உட்பட சகல கட்டமைப்புக்களும் சிதைக்கப்பட்ட நிலையிலும் மீண்டும் எமது பாடசாலைகளைப் புனரமைத்து இருக்கின்ற வசதிகளைக் கொண்டு மிகக் குறைந்த வசதியோடு எங்களுடைய ஆற்றல்களை, திறமைகளை அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் மாணவச் செல்வங்களை பாராட்டுவதில் மகிழ்வடைகிறோம்.

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் அடைந்திருக்கின்ற வெற்றி, சாதனை எல்லா மாணவர்களுக்கும் ஊக்கப்படுத்தலாக அமைந்துள்ளது.

மாணவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவித தடங்கல்கள், தேவைகள் இருப்பினும் அவற்றை நிறைவேற்ற தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள எமது கட்டமைப்புகளிலும் அணுகி ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாணவர்களின் சாதனை எமது தேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது. இன்னும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துவதோடு மாணவர்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம் என அவர் கூறினார்.

தமிழர்தாயகத்திலும் மற்றும் சிறிலங்கா தேசிய மட்டத்திலும் நடைபெற்ற நாடகப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற கிளிநொச்சி மாகாவித்தியாலயம், கிளிநொச்சி மத்தியகல்லூரி மற்றும் பிரமந்தனாறு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நாடகத்தில் பங்கு பற்றிய மாணவர்களையும், நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. தமிழீழ கல்விக்கழகம், தமிழீழ மாணவர் அமைப்பு மற்றும் அரசியல் துறையினர் ஆகியோர்இணைந்து இக் கௌரவிப்பு நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தனர்.

கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் முற்பகல் பத்து மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்விற்கு தமிழீழமாணவர் அமைப்புப்பொறுப்பாளர் நளன் தலைமை தாங்கினார்.

இதில் பாராட்டுரைகளை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், கிளிநொச்சி வலையக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். (ச)-

## கிழக்கில்...

சரணடைந்த ஞானதீபன் கருத்துத் தெரிவிக்கையில்:-

அக்கரைப்பற்றுப் பள்ளிவாசல் மீதான தாக்குதல் மற்றும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கும் இந்த ஒட்டுப்படைதான் காரணம். அண்மையில் எங்கள் இருவராலும் தாக்கி அழிக்கப்பட்ட ஒட்டுப்படையைச் சேர்ந்த முக்கிய சகாவான இனியபாரதி, எங்களிடத்தில் கூறுவார் நாம் தமிழ், முஸ்லிம் மக்களிடையே தாக்குதலை நடாத்தும் போதுதான் எமது பக்கம் ஆதரவு கிடைக்கும் எனவே விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் மீதான தாக்குதலை நடாத்துவதே இவர்களது திட்டமாகவுள்ளது எனக் குறிப்பிட்டார். ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ஞானதீபன் மேலும் கூறுகையில்:- கருணா குழு என்னும் ஒட்டுப் படையில் மொத்தம் 40 பேர் உள்ளனர். இவர்களை வழிநடாத்துவது பிள்ளையான் என்பவரே ஆகும். தாக்குதல் சம்பவங்களுக்குப் போகின்றபோது போக்குவரத்து ஏற்பாடுகளை சிறிலங்கா படைப் புலனாய்வுப் பிரிவினரே மேற்கொள்கின்றனர். மட்டக்களப்பில் பற்பொடிக் கம்பனி என்னும் இராணுவ புலனாய்வுப் பிரிவின் கப்டன் குமார், சுரேஸ் ஆகியோருக்கும் ஒட்டுப் படைக்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளது. வவுணதீவில் விடுதலைப் புலிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு முன்னதாக ஒட்டுப் படையினர் மட்டக்களப்பு பற்பொடிக் கம்பனியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர். பின்னர் அவர்களின் ஏற்பாட்டில் வாவிக்கு இங்கால் கொண்டுவரப்பட்டு தாக்குதல் நடாத்தப்பட்டது. தாக்குதல் சம்பவங்கள் மற்றும் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னதாக சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள படை முகாமிற்கு சென்றதும் அங்கு தேவையான ஆயுதங்கள் வழங்கப்படும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்துகொண்டு துரோகமிளைத்ததன் காரணமாக விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா தற்பொழுது இந்தியாவில் இருக்கிறார் எனவும் தொலைபேசியில் கருணா தொடர்பு கொள்வதாகவும் சரணடைவதற்கு முதல் நாள்கூட தன்னிடமும் கருணா தொலைபேசியில் பேசியதாகவும் தெரிவித்த ஞானதீபன் ஒட்டுப் படையின் முக்கிய நபர்கள் கருணா இந்தியாவில் இருப்பதாகத் தங்களிடம் தெரிவித்தார்கள் என்றும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் அதாவுல்லாவுக்கும், ஆயுதக் குழுவுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அதாவுல்லாவின் நெருங்கிய முக்கிய நபரான பௌசர் என்பவர் ஒட்டுப்படையினருடன் செயற்பட்டுள்ளதை சம்பவங்கள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் உயிரிழந்த இனியபாரதிக்கும் அதாவுல்லாவுக்கும் இடையிலான தொடர்புகளை பௌசர் என்பவரே ஏற்படுத்திக் கொடுத்தார். அக்கரைப்பற்று பச்சைப்பள்ளி என்னுமிடத்தில் தங்கியிருப்பதற்கு வீடும், பௌசர் எடுத்துத் தந்தார். இந்த வீடு அதாவுல்லாவின் ஏற்பாட்டில்தான் நடைபெற்றதாகவும் குறிப்பிட்ட அவர் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஒட்டுப்படைகளுக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததையும் ஞானதீபன் தெரியப்படுத்தினார்.

அதாவது இனியபாரதி தினமும் காலையில் தொடர்பு கொள்வது டக்ளஸ் தேவானந்தாவுடன்தான். தொலைபேசியில் இருவரும் உரையாடுவார்கள். அதேபோன்று டக்ளஸ் தேவானந்தாவும் தொலைபேசியில் இனியபாரதியுடன் தொடர்பு கொள்வார் எனவும் தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் சிறிலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இனியபாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோது டக்ளஸ் தேவானந்தாவின் அழுத்தத்தினால் இனியபாரதி விடுவிக்கப்பட்டதாகவும் புகழ்வேந்தன் தெரிவித்தார். இதற்கு கையுபகாரமாக கணனி ஒன்றை வாங்கி இனியபாரதி டக்ளஸ் தேவானந்தாவுக்கு அன்பளிப்புச் செய்ததாகவும் குறிப்பிட்டார்.

களுவன்கேணியைச் சேர்ந்த சாமித்தம்பி அருண்குமார்(வயது-26) எனும் ஞானதீபன், வந்தாறு மூலையைச் சேர்ந்த துரைசிங்கம் சந்திரகுமார் (வயது-21) எனும் புகழ்வேந்தன் ஆகிய இருவரும் ஒட்டுப்படையின் நடவடிக்கை காரணமாக அதிருப்தியுற்று அம்பாறை மாவட்டம் மாந்தோட்டம் என்னும் இடத்தில் தங்கியிருந்த ஒட்டுப் படையின் முக்கிய சகாவான இனியபாரதி, சுமன், சின்னமணி, தேவன் ஆகிய நால்வரையும் தாக்கியழித்துவிட்டு விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.